இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 01 | திகதி : 12.01.2020 | விலை : 30.00

## "சாதனைத் தமிழன்" விருது

### அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாருக்கு



"டான்" தொலைக்காட்சிக் குழுமத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான "சாதனைத் தமிழன்" விருது திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இரவு யாழ்.முற்றவெளி மைதானத்தில் 2020 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக "டான்" தொலைக்காட்சி ஏற்பாடு செய்த பிரமாண்டமான நிகழ்வின் போது இடம்பெற்றது.டான் தொலைக்காட்சியால் கடந்த 2018 ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகின்றது.

2018 ஆம் ஆண்டுக்கான விருது கலாநிதி ஆறுதிருமுருகனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தமிழர் திருநாள் தைத்திருநாள்
அமைதி ஓங்க பொங்கி மகிழ்வோம்
துயர்கள் நீங்க பொங்கி மகிழ்வோம்
மனித நேயம் மண்ணில் மரை
மனங்கள் பொங்க
இங்கிதம் பொங்குவோம்
வாழ்த்துக்கள்!!



பொங்கல் வாழ்த்துக்கள்

## "தர்மபிரபாஷ்வர" விருது பெறும் எம் பொது நிலையினர்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் "தர்மபிரபாஷ்வர" விருது வழங்கும் நிகழ்வு 07.12.2019 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்றது. தேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ஆசீர்வாதத்துடன் தேசிய கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், கத்தோலிக்க வெகுசன ஊடக மத்திய நிலையம் மற்றும் இலங்கை கிறிஸ்தவ சபையின் ஒத்துழைப்புடனும் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் 37 கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## புதிய ஆளுநர் யாழ் ஆயரிடம் ஆசி



யாழ். மாவட்டத்தின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்ற திருமதி P.S.M. சாள்ஸ் அவர்கள் கடந்த ஜனவரி 08ம் திகதி யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்து இறை ஆசீரைப் பெற்றுக் கொண்டார்.

இச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசரத்திட்டங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

## துயருறுவோர் ஆண்டு

### குருக்கள், துறவியர்களுக்கான கருத்தரங்கு

எமது யாழ் மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் துயருறுவோர் ஆண்டு பற்றி வெவ்வேறு ஆணைக்குழுக்களால் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் முன்னின்று செயற்படுத்தும் பொறுப்பு குருக்கள், துறவியரையே சாரும். எனவே இச்செயற்றிட்டங்கள் பற்றிய விளக்கக் கருத்தரங்கு குருக்கள், துறவியருக்கு வருகின்ற ஜனவரி 25ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை யாழ். பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறும்

மறைமாவட்டக் குருக்கள், துறவியர் ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்படும் இக்கருத்தரங்கை இவ் ஆணைக்குழுவின் இயக்குனர் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் ஒழுங்கு செய்துள்ளார். யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலந்து பலனடையுமாறு யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவியர், அருட்சகோதரிகள் அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

## புதிய பரிணாம வளர்ச்சியை நோக்கி இலங்கை கிளரேசியன் சபை



இலங்கையில் பணி புரிகின்ற அமல மரியின் மறை போதகர்கள் (கிளரேசியன் சபை) தமது வளர்ச்சியின் புதியதோர் மைல் கல்லாக, ஓர் மாநிலமாக அத் துறவற சபையினர் தனித்தியங்கும் அங்கீகாரத்தினை உயர் தலைவர் அதி வணக்கத்திற்குரிய மத்தியூ வட்டமட்டம் கி.ச, அறிவித்துள்ளார்.

இந்த அங்கீகாரத்தினைக் கடந்த வருடம் ஐப்பசி மாதத்தில் அவர் வழங்கியுள்ளார். இதன் படி இலங்கையின் கிளரேசியன் சபையினை வழி நடத்த புதிய தலைவராக அருட்பணி யோசப் ஜெயசீலன் கி.ச அடிகளாரும், ஆலோசகராக அருட்பணி அருளப்பு மில்பர் வாஸ் கி.ச அடிகளாரும், நிதிப்பொறுப்பாளராகவும் ஆலோசகராகவும் அருட்பணி சதீஸ் சவரிமுத்து கி.ச அடிகளாரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் அப்போஸ்தலராம் புனித யோசப்வாஸ் அடிகளாரின் திருப்பெயரை இப் புதிய மாநிலம் தனது பெயராகத் தெரிவு செய்ததுடன் தமது பணிகளைக் கடந்த ஐப்பசி மாதம் 24ம் நாள், தூய கிளாரட்டின் பெருவிழாவாகிய அந்நன் நாளில் உயர் தலைவரின் பிரதிநிதியான அருட்பணி ஹென்றி ஒமொனிசாயே கி.ச அவர்களின் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தனர். இந் நிகழ்விலே இலங்கை மாநிலத்தினைக் கடந்த 25வருடங்களுக்கும் மேலாக வழிநடத்தி வருகின்ற ஜேர்மன் மாகாணத்தின் தற்போதைய தலைவரும் சென்னை மாகாணத் துணைத்தலைவரும் கலந்து சிறப்பித்திருந்தனர். புதியதோர் பயணத்தினை ஆரம்பிக்கின்ற இலங்கை கிளரேசியன் சபையின் புனித யோசவாஸ் மாநிலத்தினை உளமார வாழ்த்துவதோடு அவர்கள் பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றோம். -

## யாழ் மறைமாவட்ட ஆணைக்குழுக்களால் முன்னெடுக்கப்படவுள்ள துயருறுவோர் ஆண்டுக்கான திட்டங்கள் தயார்

### தாமதமின்றி செயற்படுத்துமாறு ஆயர் பணிப்பு

மலர்ந்திருக்கும் 2020 ஆண்டை எமது யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் துயருறுவோர் ஆண்டாக அனுசரிப்பதெனத் தனது திருவருகைக்கால சுற்றுமடலில் எமது ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பிரகடனப்படுத்தியிருந்தது நாம் அறிந்ததே. இதன் அடிப்படையில் இவ் ஆண்டில் செயற்படுத்தப்படவேண்டிய செயற்பாடுகள் பற்றிய திட்டங்களை முன்வைக்குமாறு மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள் பணிக்கப்பட்டார்கள்.

இவ்வகையில் மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் இயக்குநர்களுக்கான விசேட கூட்டம் கடந்த 07-01-2020 அன்று ஆயர் தலைமையில் நடைபெற்றபோது எல்லா ஆணைக் குழுக்களின் இயக்குநர்களும் தத்தம் திட்டங்களை முன்வைத்தார்கள். இவை பற்றிய கலந்துரையாடலின் பின் ஆயர் அவர்கள் எல்லா ஆணைக்குழுக்களும் தாமதமின்றி இவற்றை செயற்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவேண்டும் என்று பணிப்புரை வழங்கினார்.

எமது மறைமாவட்டத்தின் வெவ்வேறு ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட துயருறுவோர் ஆண்டிற்கான செயற்திட்டங்களில் குறிப்பிடப்படக்கூடியவற்றின் விபரங்களை 03ம் பக்கத்தில் காணலாம்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## எமக்கு ஏன் இந்தப் பொங்கல்

பொங்கல் விழாவைத் தமிழர் தேசிய விழாவாகப் பலர் கருதுகின்றனர். பொங்கலை தமிழர்கள் சமயங்களைக் கடந்து கொண்டாடும் வழக்கமும் உள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் நமது ஆலயங்களில் கரும்புடன் பொங்கல் விழா கொண்டாடுகின்றோம். தமிழர் திருநாளாக நன்றியதலின் விழாவாக தமிழ் மக்களாகிய எம்மால் தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கு உதவிய இறைவனுக்கும் இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக இப்பொங்கல் விழா அமைகின்றது.

பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பல பொருள் பெறுகின்றது. எவ்வாறாக இருப்பி னும் நன்றியறிதலே பொங்கல் விழாவின் கருப்பொருளாக அமைகின்றது. இத்தகைய அர்த்தங்களுடன் பொங்கல் விழாவை நாம் கொண்டாடும் போது தான் அவ்விழா உண்மையான அர்த்தத்தைப் பெற்றுக்கொள்கின்றது. அன்றேல் பொருளற்ற விழாக்களில் ஒன்றாக பொங்கல் விழாவும் மங்கிப் போகும். நன்றியறிதல் என்பது இன்று எம்மை விட்டு எத்தனையோ படி தாண்டிச் சென்றுவிட்டது. நன்றி கெட்டவர்களாக, எமக்கு உதவியவர்களை மறந்தவர்களாக, கண்டும் காணாதவர்களாக நாம் வாழ்கின்ற சந்தர்ப்பங்களை அதிகமாக்கும். "நன்றி மறப்பது நன்றன்று" நன்றல்லதை அன்றே மறப்பது நன்று" என்ற ஆன்றோர் வாக்கை மறந்து நன்றல்லதையே தினமும் அசைபோட்டு நாம் வாழ்வதால் எமது வரலாற்றுப் பக்கங்கள் கறை படிந்தவையாகப் புரட்டப்படுகின்றன. கிறிஸ்து இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது பத்துத் தொழுநோயாளர்கள் அவரிடம் குணம் பெற்றார்கள். ஆனால் ஒருவன் மாத்திரமே திரும்பி வந்து அவருக்கு நன்றி தெரிவித்தான். "மற்ற ஒன்பது பேரும் எங்கே" எனக் கேட்டு அன்று அங்கலாய்த்தார். இப்படியான ஒரு நிலையிலே தான் நாமும் இன்று வாழ்கின்றோம். நன்றியே அனைத்து நன்மைத்தனத்துக்கும் ஊற்றாகும். அத்தகைய நன்றியை நாம் மறக்கும் போது அல்லது வாழ மறுக்கும் போது நமக்கு ஏன் பொங்கல்?

பொங்கல் என்பது கொதித்தல் என்ற கருத்தையும் பெறுகிறது. தீமைகளைக் கண்டு நாம் கொதித்தெழ வேண்டும். இழிவான ஈன நிலைகள் கண்டு இடித்துரைக்க வேண்டும். சமுதாய சாபக்கேடுகளை சாட வேண்டும். அநீதிகளைக் கண்டு நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும். எருசலேம் தேவாலயத்தில் அன்று இயேசு எதற்காக சாட்டை ஏந்தினார்? நாம் இன்று என்ன செய்கின்றோம். தீமைகளைக் கண்டு பாராமுகம் கொண்டவர்களாக "யார் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன" என்ற போக்கில் வாழத் தலைப்படுகின்றோம். நீதியின் மேல் பசி தாகம் அற்றவர்களாக சில சந்தர்ப்பங்களில் அநீதிகளுக்கும் தீயசக்திகளுக்கும் துணை போகின்றவர்களாகவும் நாம் வாழ்கின்றோம். அநீதிகள், தீமைகள், அக்கிரமங்கள், பாவங்களைக் கண்டும் நாம் பொங்கி எழாது மௌனித்திருந்தால் நமக்கு ஏன் பொங்கல்?

பொங்கல் என்பது செழித்தல் எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. எம் வாழ்வு செழிக்க வேண்டும் என எண்ணியே நாம் அனைவரும் முற்றத்தில் கோலமிட்டுப் பொங்குகின்றோம். எம் வாழ்வு செழிக்க வேண்டுமென நினைக்கின்ற நாம் பிறர் வாழ்வும் செழிக் வேண்டுமென்று எண்ணம் கொள்கின்றோமா? யாழ் மறைமாவட்டத் திருஅவை இவ்வாண்டைத் துயருறுவோர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி நிற்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். பல்வேறு நிலைகளிலும் துன்புறுவோறின் துயர் நீங்கி அவர் தம் வாழ்வு செழிக்க நாம் உழைக்க வேண்டும். செழிப்புக்காக ஏங்கி நிற்கும் வாடிய பயிர்களுக்கு வான் மழையாக நாம் மாறி அவர்தம் வாழ்வு வளமடைய எத்தகைய பணிகளை ஆற்ற முடியுமோ அத்தகைய பணிகளை ஆர்வத்துடனும் தியாக சிந்தனையுடனும் நல்ல சமாரியனாக நின்று தோள் கொடுக்க முடியாதவிடத்து நமக்கு ஏன் பொங்கல்?

பொங்கல் என்பதற்கு மிகுதல் என்ற பொருளுமுண்டு. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வு உயரவேண்டுமென்றே முயற்சி செய்கின்றான். அதற்காகவே உழைக்கின்றான், வியர்வை சிந்துகின்றான். ஏன்? எமது பிரார்த்தனைகள் கூட எமது உயர்வுக்கானவையே ஆகும். நாம் மேலும் உயர்வான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற சிந்தனையோடு தான் இறைவனிடம் எமது பிரார்த்தனைகள் மேலெழுகின்றன. இத்தகைய உயர்வான வாழ்வுக்கு எமக்குக் கிடைக்க வேண்டுமெனில், அதற்கு இறைவன் வரம் தந்து அருள் புரிய வேண்டுமெனில் முதலில் எமது உள்ளம் உயர்வடைய வேண்டும். நமது மனங்கள் நன்மைத் தனங்களாலும், நல்ல சிந்தனைகளாலும் உத்வேகம் அடையும் போதுதான் இறைவனின் ஆசியுடன் எம் வாழ்வு உயர்வு பெறும். உள்ளங்கள் கறை படிந்திருக்க, உள்ளங்கள் ஊமையாக இருக்க, உள்ளங்களில் பசுமைக்குப் பதில் வரட்சி குடியிருக்க வாழ்வு எப்படி உயர முடியும்? இந்நிலையில நமக்கு ஏன் பொங்கல் ?

பொங்கல் என்பதற்கு சமைத்தல் அல்லது நல்லது செய்தல் என்ற மற்றுமொரு பொருளுமுண்டு. பொதுவாக நாம் உணவு தயாரித்தலையே சமைத்தல் என்று கூறுகின்றோம். எமது உடல் நலம் பெற நாம் ஆரோக்கியமாக வாழ உணவை சமைத்து உண்ணுகின்றோம். இதனால் சமைத்தல் என்பது நல்லது செய்தல் என்னும் பொருளையும் பெறுகிறது. எமக்கும் பிறருக்கும் நல்லதையே நாம் செய்ய வேண்டும். "மகன் தந்தையிடம் மீனைக் கேட்டால் அவன் தந்தை அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா" என வினவிய இயேசு அதனூடாக நல்லதைச் செய்யும் படியும், நல்லதை சொல்லும் படியும் எமக்குக் கற்பித்துள்ளார். "நல்ல கனி கொடாத மரம் எல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" என்ற இயேசுவின் இறைவார்த்தை நல்லதில் நிலைக்கும் படி எம்மை அழைக்கின்றது. இந்த அழைப்பைப் புரிந்து கொள்ளாத விடத்து அல்லது நல்லதைச் செய்ய முடியாத விடத்து எமக்கு ஏன் இந்தப் பொங்கல்?

எந்தவொரு விடயத்திலும் ஆழமான சிந்தனையற்று, உய்த்துணர்வற்று ஆடுகளைப் போல நுனிப்புல் மேய்கின்ற வாழ்க்கையிலிருந்து வெளிவந்து நாம் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றையும் அர்த்தத்துடன் நிதானமுள்ளவர்களாக நின்று செயற்படும் போதுதான் நமது செயல்களோ அல்லது விழாக்களோ முழுமை பெற முடியும். நாமும் மனிதம் நிறைந்த மானுடர்களாக முழு மனிதர்களாக வாழ முடியும். நெல்லரிசி, பால், பயறு, சர்க்கரை என்பவற்றை பானையிலிட்டு பொங்கிப் படைத்து உண்டு மகிழ்வதோடு மட்டும் பொங்கலை நிறுத்தி விடாது நல்ல சிந்தனைகளையும் செயல்களையும் துயருறுவோர் தம் துயரங்களையும் எம் மனங்களாகிய பானைகளிலிட்டு பொங்கியவர்களாகப் பயணம் தொடர்வோம். அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்குத் தந்தையுமாகிய அருட்ணி J.B.அன்ரனிதாஸ் அவர்களின் அன்புத்தாயார் **திருமதி ஜோன்பெப்ரிஸ் பிலோமினம்மா (செல்லமணி)** அவர்கள் கடந்த 28.12.202019 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ் மறைமாவட்ட அருட்பணியாளரும் புனித சவேரியார் பெரிய குருமடத்தில் உருவாக்குனராகப் பணியாற்றிவரும் அருட்பணி சந்திரன் யேசுதாசன் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு தேவசகாயம் தொம்மையப்பு** அவர்கள் கடந்த 05.01.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

பாதுகாவலன் குடும்பம்.

# இறைவார்த்தை ஞாயிறு ஜனவரி 26 அனுஷ்டிப்பு

ஆண்டின் பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு. அதாவது ஜனவரி 26ம் திகதி சிறப்பிக்கப்படும் "இறைவார்த்தை ஞாயிறு", கடவுள் மற்றும், அவரது வார்த்தை மீது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி, அன்பு செலுத்தி, பிரமாணிக்கத்துடன் சாட்சிபகர நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இஞ்ஞாயிறு குறித்துப் பேசியுள்ள, புதியவழி நற்செய்தி அறிவிப்புத் திருப்பீட அவைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா அவர்கள், இறைவார்த்தையைக் கொண்டாடி, அதை ஆழ்ந்து படித்து, உள்வாங்கி, பரப்புவதற்கென அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறப்பான நாள், நம் வாழ்வில் இறைவார்த்தை எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வதற்கு உதவுகின்றது என்று கூறியுள்ளார்.

உலகில் அதிகம் விநியோகம் செய்யப்பட்டுள்ள நூலே திருவிவிலியம் எனவும், இந்நூல் நம் கைகளில் இல்லாததால், அது நன்கு பத்திரப்படுத்தப்பட்டு தூசு படிந்துள்ளதாக உள்ளது என்றும், பேராயர் பிசிக்கெல்லா அவர்கள் கூறியுள்ளார். அனைத்து மறைமாவட்டங்களும், பங்குத்தளங்களும் இறைவார்த்தை ஞாயிறை மிகுந்த படைப்பாற்றலுடனும், புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளுடனும் கொண்டாடு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவார்த்தை ஞாயிறு பற்றி, 2019ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதி "Aperuit illis" என்ற தலைப்பில், தன் சொந்த விருப்பத்தின்பேரில் வெளியிடும், Motu proprio அறிக்கையின் வழியாக அறிவித்தார்.

திருவிவிலியத்தின் பெரும்பகுதியை இலத்தீனில் மொழி பெயர்த்த புனித ஜெரோம் அவர்கள் இறைபதம் அடைந்ததன் 1,600ம் ஆண்டு நிறைவு 2019ம் ஆண்டில் நினைவுகூரப்பட்டது. "மறைநூலை அறியாதவர், கிறிஸ்துவை அறியாதவர்" என்று சொன்னவர், புனித ஜெரோம்.

2019ம் ஆண்டு அக்டோபர் நிலவரப்படி, விவிலியம் முழுவதும் 698 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதோடு, புதிய ஏற்பாடு மட்டும் 1,548 மொழிகளிலும், விவிலியத்தின் சில பகுதிகள் அல்லது கதைகள் மேலும் 1,138 மொழிகளிலும், விவிலியத்தின் சில பகுதிகள் குறைந்தது 3,385 மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

# 'வணங்குதல்' வார்த்தைக்கு திருத்தந்தை விளக்கம்

இத்தாலி நாட்டில் சிறப்பிக்கப்பட்ட திருக்காட்சிப் பெருவிழாவையொட்டி, 'வணங்குதல்' என்பதன் பொருளை விளக்கும் டுவிட்டர் செய்திகளை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதே பொருளில், வேறு இரு டுவிட்டர் செய்திகளை வெளியிட்டுள்ளார்.

புதனன்று வெளியான டுவிட்டர் செய்திகள் "வணங்குதல் என்பது, நாம் நமக்கே அடிமையாகும் தளையிலிருந்து விடுதலை பெற்று வெளியேறுவது. நம்மையல்ல, ஆண்டவரை மையமாக வைப்பதே, வணங்குதலின் பொருள்" என்ற சொற்கள், திருத்தந்தை வெளியிட்ட முதல் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றிருந்தன.

"நம் வாழ்வை ஆண்டவரிடம் கொணர்ந்து, அவரை அங்கு நுழைய அனுமதிப்பதே வணங்குதலாகும். அவரது ஆறுதல், இவ்வுலகில் இறங்கிவரவும், அவரது கனிவான அன்பு நம்மை நிரப்புவதற்கும் அனுமதிப்பதே வணங்குதல் என்பதன் பொருள்" என்ற சொற்களைத் தன் இரண்டாவது டுவிட்டர் செய்தியாகப் பதிவு செய்திருந்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

@pontifex விவரங்கள்

ஒவ்வொரு நாளும் @pontifex என்ற வலைத்தள முகவரியில் திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள், இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன.

ஜனவரி 8, இப்புதன் முடிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள், 2,296 என்பதும், அவரது டுவிட்டர் பதிவுகளை, ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும், 1 கோடியே 82 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன.

@franciscus விவரங்கள்

இத்துடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செயற்பாடுகளை மையப்படுத்தி, @franciscus என்ற பெயரில் இயங்கிவரும் instagram தளத்தில், இதுவரை வெளியான புகைப்படங்கள், மற்றும், காணொளிகள், 825 என்பதும், அவற்றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 65 இலட்சம் என்பதும்

# மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு

சின்னக்கடை மூத்தோர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒளி ஏற்றலும், மூத்தோர் ஒன்றுகூடலும் என்னும் புத்தாண்டு நிகழ்வு 04.01.2020 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கிராம அலுவலர் மண்டபத்தில் இடம்பெற்றன.

மூத்தோர் சங்கத் தலைவி திருமதி பி.மேரி பெனிக்னாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி ஜெயசீலன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழகத் தலை வர் திரு.லக்ஸ்மிகாந்தனும் கலந்து சிறப்பித்தனர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அடிகளார் சமூகச் சீர்கேடுகள் இடம்பெறும் இக்கால கட்டத்தில் மூத்தோர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனக் கூறினார். இந்நிகழ்வின் விசேட நிகழ்வாக யாழ் பிரதேச செயலர் பிரிவில் வலிந்துதவு சமூக சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்ட இச்சங்கத்தின் செயலாளர் திருமதி அஞ்சலா பேர்மினஸ் அவர்கள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் கலந்துகொண்ட மூத்தோரும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## காவலன் கலசம்

# துயருறுவோர் ஆண்டுக்கான செயற்திட்டங்கள்

**யாழ். மறைமாவட்ட ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட துயருறுவோர் ஆண்டுக்கான செயற்திட்டங்களில் சிலவற்றைக் கீழே காணலாம்:**

**மனித முன்னேற்ற நிலையம்**

- அடுத்தவருக்குக் கொடுத்து வாழ வேண்டும் என்ற மனநிலையை மக்களிடத்தில் உருவாக்கத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களில் அநாவசிய செலவுகளைத் தவிர்த்து தேவையுள்ளோருக்கு உதவுதல்.
- வறுமையில் வாடும் சிறுவர்கள், தனிமையில் தவிக்கும் முதியோர், சிறைகளில் வாடுவோர், நோயுற்றோர் மற்றும் மாற்று வலுவுள்ளோர் மட்டில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.

**மறைக்கல்வி ஆணைக்குழு**

- துயருறுவோரில் துன்புறும் கிறிஸ்துவைக் கண்டு அவர்கள் துயர் துடைக்கும் மனப்பக்குவத்தை மறைக்கல்வி மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையிலான பாட ஆயத்தங்களைச் செய்து மறை ஆசிரியர்கள் மூலமாக அவர்களைப் பயிற்றுவித்தல்.
- துயருறுவோர் ஆண்டை மையப்படுத்தியதாக இவ்வாண்டின் போட்டிகளை, பரீட்சைகளை நடாத்துதல்.

**அன்பிய ஆணைக்குழு**

- வலயங்களில், அன்பியங்களில் துயருறுவோர் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்குதல்.
- துயருறுவோர் ஆண்டை மையப்படுத்தியதாக வேதாகமப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு அன்பியங்களில் அவ் இறைவார்த்தைப்பகுதிகள் பகிரப்பட்டு செயற்படுத்தல்.
- தூய தமதிரித்துவ விழாவை அன்பிய விழாவாகக் கொண்டாடுதல்.

**நீதி சமாதான ஆணைக்குழு**

- அரசியல் கைதிகளின் விடுதலைக்காக உழைத்தல்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தில் துணைநின்று அவர்களின் துயர் துடைக்க உதவுதல்.
- தற்போதைய அச்சமூட்டும் அரசியல் சூழ்நிலையைக் கருத்திலெடுத்து மக்களின் அமைதியான, பயமற்ற வாழ்வை உறுதி செய்யும் வழிவகைகளை முன்னெடுத்தல்.

**பொதுநிலையினர் ஆணைக்குழு**

- மறைக்கோட்ட ரீதியாக இரண்டு மாணவர்கள் வீதம் 12 மாணவர்களுக்கு வின்சன்ட் டி போல் சபை மூலமாகக் கல்வி உதவி வழங்குதல்.
- மாற்று வலுவுடையோர்களை இனங்கண்டு மறைக்கோட்ட ரீதியாக அவர்களை ஒன்றுகூட்டி ஊக்கப்படுத்தல்.
- முதியோர்களை சந்தித்து அவர்களை மகிழ்வித்து ஆறுதலளித்தல்.

**இளையோர், சமூகத்தொடர்பு ஆணைக்குழு**

- இளையோர் துயருறுவோர் மட்டில் கரிசனையும் இரக்கமும் காட்டும்படியான விழிப்புணர்வை உருவாக்கும் பயிற்சிப் பாசறைகளை நடாத்துதல்.
- குறும்படம், நாடகம், பாடல், மற்றும் புகைப்படப் போட்டிகளை துயருறுவோரின் துயர் துடைத்தல் என்னும் கருப்பொருளில் நடாத்துதல்.

**குடும்ப ஆணைக்குழு**

- திரு அவையில் வாழும் பின்வரும் பிரிவினர் ஆண்டவரின் ஏழைகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பணியிலேயே இவ்வருடம் கவனம் செலுத்தப்படும்.
- முதியோர்

  பாராமரிப்பின்றி வாழும் முதியோர்.
- தம்பதியர்

  பிரிந்து வாழும் தம்பதியர், விவாக இரத்துச் செய்ய முயலும் தம்பதியர், விவாக இரத்துச் செய்த தம்பதியர், பலதார மணம்புரிந்தோர், கணவனற்ற மனைவியர், கணவன் வெளிநாட்டில் வாழும் மனைவியர்
- பிள்ளைகள்

  கருவில் கொலை செய்யப்படும் பிள்ளைகள், பெற்றோரற்ற பிள்ளைகள், துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகள், மது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானோர், சமூக வலைத்தளங்களுக்கு அடிமையானோர், வறுமையில் வாடும் மாணவர்கள், இளவயதுக் கற்பமான யுவதிகள், முதிர்கன்னியர்
- நலம் குன்றியோர்

  மனநலம் குன்றியோர், உடல்நலம் குன்றியோர், தீராத நோயால் பாதிக்கப்பட்டோர், அங்க இழப்புக்கு உள்ளானோர், தற்கொலை முயற்சியாளர்.

**திருப்பாலத்துவ சபை**

- துயருறுவோர் மட்டில் கரிசனை காட்டும் பண்பை சிறுவயதிலிருந்தே கற்றுக்கொள்ளும் பொருட்டு வளவாளர்களின் துணையோடு சிறுவர் சிறுமியரை உருவாக்கி விடுதல்.
- சிறுவர் பேரணிகளின்போது பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.
- சிறுவர்கள் துயருறுவோர் மட்டில் காட்டவேண்டிய இரக்கத்தைக்கற்றுக்கொள்ள வைக்கும் வகையில் வளவாளர்களுக்கு பயிற்சி வழங்கல்.

**அழைத்தல் குழு**

- வன்னிப் பிரதேசத்தில் வாழும் 150 அனாதைச் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்.
- அழைத்தல்களை ஊக்குவிக்கும் முகமாக சிறிய குருமட மாணவர்களால் பங்குகள் தரிசிக்கப்பட்டு ஏழை மாணவர்களுக்கு உதவிகள் வழங்குதல்.

**திருவழிபாட்டு ஆணைக்குழு**

- துயருறுவோர் துயர் துடைக்கும் பணிபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான வழிபாட்டுத் தயாரிப்புகளைச் செய்து பங்குகளுக்கு அனுப்பி வைத்தல்.
- துயருறுவோர் ஆண்டுக்கான செபம் தயாரித்து விநியோகித்தல்.
- துயருறுவோர் மட்டில் காட்டவேண்டிய இரக்கம் சம்பந்தமான மறையுரைக் குறிப்புக்களை வழங்குதல்.

**கலை, பண்பாட்டுக் குழு**

- திருமறைக் கலாமன்றத்தின் உதவியுடன் துயருறுவோர் ஆண்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையிலான கலை ஆற்றுகைகளைத் தயாரித்து மேடையேற்றல்.

**நற்செய்தி அறிவிப்பு ஆணைக்குழு**

- வேதாகமத்தில்காணப்படும்துயருறுவோர் துயர் துடைக்கும் இறைவார்த்தைகளை அச்சிட்டு துண்டுபிரசுரங்களாக எல்லா இடங்களும் விநியோகித்தல்.

**குருக்கள், துறவியர் ஆணைக்குழு**

- துயருறுவோர் ஆண்டின் செயற்பாடுகளை முன்னின்று செயற்படுத்துவோர் குருக்கள், துறவியராகையால் எல்லா ஆணைக்குழுக்களின் திட்டங்களையும் அவர்கள் உள்வாங்கும் முகமாக வருட ஆரம்பத்தில் சிறப்புக் கருத்தரங்கு நடாத்துதல்.
- துயருறுவோர் ஆண்டில் ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல்.

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது 'அப்பறுயிற் இல்லிஸ்' (APERUIT ILLIS) என்னும் திருத்தூது மடல் ஊடாக இறைவார்த்தை ஞாயிறை நிறுவுதல்

1. அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக் கண்களைத் திறந்தார். (லூக்கா 24:45). உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது விண்ணேற்பிற்கு முன்னதாகப் புரிந்த இறுதிச் செயல்களில் இதுவும் ஒன்றாகும். ஒன்று கூடிய சீடர்களுக்கு இயேசு தோன்றி அவர்களுடன் அப்பத்தைப் பிட்டு இறை வாத்தையைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களின் மனங்களைத் திறந்தார். அவர் அவர்களிடம் மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும் பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் எனவும் (லூக்கா 24: 26, 46 - 47) அவர்களுடைய அங்கலாப்பிலும் அச்சத்தின் மத்தியிலும் பாஸ்காவின் மறை பொருளின் அர்த்தத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். மீட்பின் மறை பொருளுக்கு சாட்சியம் பகர, வல்லமையை அளிக்கும் தூய ஆவியாரை அனுப்புவதாக அவர் வாக்களித்தார். (லூக்கா 24:49)

கிறிஸ்தவர்கள் என்னும் அடையாளத்தை நிலைநாட்ட, உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கும் இறை நம்பிக்கையாளர் சமூகத்திற்கும், தூய மறைநூலுக்குமிடையிலான உறவு மிகவும் இன்றியமையாதது. எமது உள்ளத்தைத் திறக்கவல்ல ஆண்டவர் அல்லாமல், மறை நூலின் ஆழத்தைப்புரிந்துகொள்வது இயலாத காரியமாகும். இருப்பினும் அதன் எதிர்மறைக் கருத்தும் உண்மையானது: மறைநூல் அல்லாமல், இயேசுவினதும் திருஅவையினதும், இவ்வுலகத்தின்பணியின்நிகழ்வுகள் புரிந்துகொள்ள முடியாததாகவே இருக்கும். ஆக, 'திருவிவிலியத்தை அறியாமை கிறிஸ்துவை அறியாமை ஆகும் என புனித ஜெறோம் கோருவது பொருத்தமானதாகும். (எசாயா நூல் விளக்கவுரை - முன்னுரை 24.17 பி)

2. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் நிறைவில், ஆண்டவருக்கும் அவர் மக்களுக்கும் இடையில் நடைபெறும் தொடர் உரையாடலாக விளங்கும் அளவுகடந்த செல்வங்களை மதிக்கும் இறைவார்த்தைக்கு ஒரு ஞாயிறு தினத்தை ஒதுக்கி, முழுமையாக அர்ப்பணிக்குமாறு நான் பரிந்துரை செய்தேன். (Misericordia et Misera, 7 திருவழிபாட்டு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமையை இறை வார்த்தைக்கு அர்ப்பணிப்பது, உயிர்த்த ஆண்டவர் தமது வார்த்தையின் புதையலை எமக்குத் திறக்கவும், இவ்வுலகின் முன்னே அளவிட முடியாத செல்வங்களைப் பறைசாற்றவும், திருஅவையைப் புத்துணர்வுடன் அனுபவிக்க வழி சமைக்கிறது.

புனித எபிரேமின் போதனை இங்கே நமக்கு நினைவுறுத்தப்படுகின்றது: "ஆண்டவரே, உமது வார்த்தையில் ஒரு சொல்லிலாவது, அதன் முழுமையான செழுமையை யார்தான் புரிந்து கொள்ள முடியும்?" நாங்கள் நீருற்றிலிருந்து பருகும் மிகுந்த தாகமுடையவர்கள் போன்றவர்கள். உமது வார்த்தை அதனைக் கற்பவர்கள் கொண்டிருக்கும் பல கண்ணோட்டங்களைப் போன்று பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. ஆண்டவர் தம்முடைய வார்த்தையை பல வர்ண அழகினால் வர்ணம் பூசியுள்ளார். ஆதலால் அதனைக் கற்பவர்கள் தமது தூண்டுதலுக்கு ஏற்ப ஆழ்தியானம் செய்யமுடியும். அவருடைய வார்த்தையில் அனைத்து செல்வங்களையும் புதைத்துள்ளார். அதனால் நாம் ஒவ்வொருவரும், எம் ஆழ்தியானத்தில் அதன் செழுமையைக் காணமுடியும். (Commentary on the Diatessaron, 1, 18)

இம் மடலின் மூலம், 'இறை வார்த்தை ஞாயிறு தினத்தை' முழுத் திருஅவையும் ஒன்றிணைந்து கொண்டாடும் நோக்கத்தை, இறைமக்கள் என்னிடம் வெளிப்படுத்திய பல கோரிக்கைகளுக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். கிறிஸ்தவ குழுமம் தம் அன்றாட வாழ்க்கைக்குக்கடவுளுடைய வார்த்தை எவ்வாறு முக்கியமானது என்பதைப் பற்றிச் சிந்திக்க நேரத்தை ஒதுக்குவது இப்போது மிகவும் பொதுவானது. தங்கள் நம்பிக்கையாளருக்கு மறைநூலைக் கிடைக்கக்கூடியதாகவும், இந்த உன்னத கொடைக்கான நன்றியை அதிகரிப்பதற்கும், அதனது படிப்பினைகளுக்குத் தனது அன்றாட வாழ்வில் உருக்கொடுத்து சான்று பகரவும், பல்வேறு தள திருஅவைகள் வளமுள்ள முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளன.

தமிழில்
அருட்பணி. ஜீவேந்திரா போல் அ.ம.தி
M.Phil (Jaffna), M.A. (Coimbatore)

என்றும் புதிதாகப் படித்து ஏற்றுக் கொள்ளக்கூடிய தகமைவாய்த ஏடாகிய 'இறைவெளிப்பாடு' (Dei Verbum,) என்னும் கொள்கைக் திரட்டைக் கொண்டுள்ள இரண்டாம் வத்திக்கான் சங்கம் கடவுளுடைய வார்த்தையை மீளக் கண்டு பிடிக்கப் பேர் ஆர்வத்தைத் தந்துள்ளது.

மறைநூலின் தன்மையையையும், வழிவழியாக வழங்கப்படும் இறை வெளிபாடு (இயல் -2), அதன் இறை ஏவுதல் (இயல்-3), பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் அரவணைத்தல் (இயல் 4,5), திருஅவையின் வாழ்வில் மறை நூலின் முக்கியத்துவம் (இயல் 6), இவ் வேடு தெளிவாக விளக்குகிறது. 'திருஅவையின் வாழ்விலும் பணியிலும் இறை வார்த்தை' என்ற தலைப்பில்திருத்தந்தை 16ம் பெனடிக்ற், 2008 இல் ஆயர்களின் மாநாட்டை கூட்டினார்.



எமது திருஅவை குழுமங்களுக்கு அடிப்படையான போதனைகளைக் கொண்ட 'ஆண்டவரின் வார்த்தை' என்ற திருத்தூது அறிவுரை ஏட்டினையும் வழங்கினார். இந்த ஏடானது அதாவது இறை வார்த்தையின் செயல் திறனுக்குக் குறிப்பாக முக்கியத்துவம் அளிப்பதோடு, சிறப்பாக வழிபாட்டுச் சூழவமைவில் அதன் தனித்துவமான அருளடையாள பண்புகளையும் முன்னுரிமைப் படுத்துகிறது. ஆண்டவர் தனது மணமகளுடன் பேசுவதில் ஒருபோதும் சோர்வடையாத, அவர் அன்பிலும் உண்மையுள்ள சாட்சிகளிலும் வளரும்படி, உயிருள்ள வார்த்தையுடனான இந்தத் தீர்க்கமான உறவால் எமது மக்களின் வாழ்க்கை தொடர்ந்து குறிக்கப்படுவது பொருத்தமானது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## காவலன் கலசம்

# தாழ்ச்சியும் நமது தலைமைத்துவமும்



'யார் தருவார் இந்த அரியாசனம்' என்று கவிஞர் காளிதாசன் தனக்கு இறையருளால் கவிபுனையும் திறன் பெற்று மேன்மையடையும் போது மனம் உருகி பாடிய பாடல்

நாம் அனைவரும் இறையருளால் உயர்வையும், மேன்மையையும், சிறப்பையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும், பதவியையும் அடையும்போது பெருமிதமும் பேருவகையும் அடைகின்றோம்.

இறைவன் உறையும் ஆலயமான நமது உடலும் சரி, அதன் இயக்க விசையான இயல்பும் சரி, நமது அறிவும் சரி தன்னை முன்னிறுத்திக் கொள்ளவும், உயர்வை மற்றும் முன்னேற்றத்தை அடையவும் விழைவது இயல்பாகும். ஆயினும் எப்போது பதவி மோகமும், அதிகாரத் தன்மையும் அதிகரிக்கின்றதோ அன்றே அவனது சுயநலத் திட்டங்களும், மற்றவர்களைச் சுரண்டும் தன்மையும் அதிகரித்து விடுகின்றது.

**ஏன் மனிதனுக்குப் பதவிகளும், அதிகாரங்களும் வழங்கப்படுகின்றது?**

பிறரை ஆட்டிப்படைக்கவும், நீதியற்ற மனித நேயத்தை மனித உணர்வில் தாக்கத்தை மறுப்பதற்கு வழங்கப்பட வில்லை. மாறாக வழிகாட்டவும், ஆற்றுப்படுத்தவும், மனித நேயத் தன்மைகளைத் தமது பணியில் செயற்படுத்தவும், இன்னும் பலருக்கு தமது முன்மாதிரியான அர்ப்பணிப்புள்ள தியாக சேவையை ஆற்றுவதற்காக மட்டுமே மனிதனுக்கு பதவிகளும் அதிகாரங்களும் வழங்கப்படுகின்றது. ஆனாலும் அதிகாரங்களும் பதவிக ளும் வழங்கப்பட்ட பல மனிதர்களிடம் காணப்படும் இந்தப் பண்பு பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அதனை மறுப்பதாகக் காணப்படுகின்றது.

**பதவியும் வளர்ச்சியும்**

ஒருவர் தான் ஒரு பதவிக்கு வந்து விட்டால் தாம் முழுமையாக வளர்ச்சி அடைந்ததாகவும், தம்மில் எந்தக் குறையும் இல்லை என்று எண்ணுகிறார்கள. குறையும் குற்றங்களும் மற்றவர்களுக்குத்தான் உண்டு என எண்ணி, வாழ்நாள் முழுவதும் அடுத்தவரைத் திருத்துவதில் ஆர்வம் காட்டும் மனநிலையும் அவர்களி டம் மேலோங்கி விடுகின்றது. தாங்களும் பலவீனர்கள், தவறு செய்வதற்கு வாய்ப்பு உண்டு என்ற உண்மையை இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதால் அவர்கள் வளர்ச்சியடையப் போவதில்லை. வாழ்விலும் அடுத்த உயர் இல்க்கை அடையத் தவறிவிடுகின்றார்கள்.

1) உதாரணமாக பெற்றோர்கள் என்ற உயர் நிலையை அடைந்த மக்கள் தாம் செய்வது அனைத்தும் சரி என்றும், பிள்ளைகள் செய்வது எல்லாம் பிழை என்றும் எண்ணும் மனப்பாங்கைக் கொண்டு வாழ்வது இன்று நம் சமூகத்தில் அதிகமாக இருக்கின்றது.

2) குருக்கள் மற்றும் துறவியர்கள் என்ற உயர் நிலையை அடைந்துவிட்ட ஒருவர் கூட தாம் செய்வதும், சிந்திப்பதும் சரி என்ற அதீத போக்கில் - மக்கள் செய்வதும், சொல்வதும், திட்டமிடுவதும் தவறு என்ற நிலையில் வாழ்வதும் அதிகரித்து விட்டது.

3) மேலாளர் என்ற உயர் அந்தஸ்தைப் பெற்ற ஒருவர் தான் சொல்வது எல்லாம் சரி, மற்றவர்களின் கருத்து ஆலோசனை பயனற்றது என்ற மனநிலையில் வாழ்கின்றனர்.

4) மேல்மட்டத்தில் உள்ளவர்கள் கீழ்மட்டத்தில் உள்ளவர்களைக் குறை சொல்லியும், குற்றம் கண்டும் வாழ்வில் நிம்மதி அற்ற மன அழுத்தத்தில் வாழ்கின்றார்கள்.

எனவே தான் பதவி என்பது ஒரு மனிதனின் முயற்சியின் அடையாளமே தவிர முழுமையின் அடையாளம் அல்ல.

**பரிசுத்த திருவிவிலியத்தில் தலைவர்களும் தகுதியற்ற நிலையில் வாழ்கிறார்கள்**

ஒரு மாணவன் எப்போது பார்த்தாலும் கணக்குப் போட்டுக்கொண்டு இருப்பான். எதைப் பார்த்தாலும் எண்ண ஆரம்பித்து விடுவான். அவனைப் பார்த்து அவன் பெற்றோரே சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். பிள்ளைக்கு ஏதும் ஆகிடுமோ என்று பயந்தார்கள். அவன் சிந்தனைகளைத் திசை திருப்புவதற்காக அவனை ஒரு திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றால் மாற்றமாக இருக்குமே என்று நினைத்தார்கள். திரைப்பட இடைவேளையின் போது அவனிடம் படம் எப்படி இருக்கின்றது? என்று கேட்டார்கள். அவனோ கதாநாயகன் இதுவரை 75 முறை உடைகளை மாற்றியிருக்கின்றான் என்று சொன்னானாம். பழைய பழமொழி ஒன்று உண்டு. 'நாய் வாலை நிமிர்த்த முடியுமா?.

மறைநூல் அறிஞரோடு சேர்ந்த பரிசேயர் கூட்டமும் அப்படித்தான் சட்டங்களையும், மக்கள் அதை எத்தனை முறை மீறுகிறார்கள் என்பதையும் நுணுக்கமாக எண்ணிக் கொண்டிருந்தார்களே தவிர தங்கள் வாழ்க்கையை ஒரு நொடிப் பொழுதும் எண்ணிப் பார்க்காதவர்கள் அவர்கள். இலத்தீன் அமெரிக்கப் புரட்சிகரக் கவிதைத் தொகுதி யில் 'அரசியலற்ற அறிவுஜீவிகள்' என்ற அழகான கவிதைப் பகுதி உண்டு. உலகமே அழிந்தாலும் நான் மட்டும் சுகமாக இருந்தால் போதும், என் சுயநலம்தான் எனக்குப் பெரிது" எனக் கர்ஜிக்கும் சுயநலவாதிகளைப் பற்றியது அது.

ஏழை மக்களைத் துன்புறுத்துவதையும், அவர்களின் உயிரை உள்ளுக்குள்ளே அணு அணுவாய் கருக வைப்பதையும் அன்றாடச் செயலாகக் கொண்ட கொடியவர்கள் மற்றவர்கள் வாழ்வதே தங்கள் இனிமையான நொடிகளுக்காக என்று நினைத்துக் கொள்பவர்கள் இவர்கள் என அக்கவிதை தொடருகிறது.

அந்த கவிதை வரிகளைப் போல மக்கள் இருப்பதே தாங்கள் அதிகாரம் செலுத்துவதற்காக என்றும் - மத, இன, அரசியல் சாயம் பூசி அவர்க

**அருட்பணி. நிர்மலராஜ் செ.தா.**

ளைப் பிரித்து அடிமைகளாக ஆட்சி செலுத்தவுமே என்றும் நினைத்த தகுதியற்ற தலைவர்களான மறைநூல் அறிஞர் மற்றும் பரிசேயக் கூட்டத்தினரை இயேசு சாடுகிறார். இவர்கள் ஒரு காலமும் திருந்த மாட்டார்கள். ஆனால் எல்லோரையும் சட்டத்தால் திருத்த வேண்டும் என்று நினைப்பார்கள் என்பதே உண்மை.

மறைநூல் அறிஞரும், பரிசேயரும் தங்களை மோசேயின் அதிகாரம் கொண்ட மேன்மக்களாக எண்ணிக் கொண்டனர். சட்டங்களையும், மரபுகளையும் முறையாகக் கடைப்பிடிப்பவர்களாக தங்களை வெளிக்காட்டிக் கொண்டார்கள். அது உண்மையும் அல்ல. தாங்கள் கடைப்பிடிக்காத, தங்களால் கடைப்பிடிக்க இயலாத சட்டங்களையெல்லாம் சாதாரண பாமர மக்கள் மீது கடுமையாகத் திணித்தார்கள். குறிப்பாக சமய மரபுகள் எனவும், ஓய்வுநாள் சட்ட திட்டங்கள் எனவும் சமயச்சாயம் பூசி சட்டங்களை வகுத்து, அதை தாங்கள் சிறி தும் பின்பற்றாமல் மற்ற மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தினார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளை மக்கள் மீது சுமத்தும் இவர்கள் தங்கள் விரலால் அதைத் தொட்டு அசைக்கக்கூட முன்வரமாட்டார்கள்.

சமூகத்தில் உயர்ந்தவர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட இவர்கள் இத்தகைய வெளிவேடத்தால் தங்கள் தகுதிக்கும் மேலான சில பெருமைகளையும், புகழ்ச்சியையும், வணக்கத்தையும், மதிப்பையும் பெறப் பேராவல் கொண்டார்கள். பொது இடத்திலும், சந்தை வெளிகளிலும் வணக்கம் பெறுவது, விருந்துகளில் முதல் இருக்கையை எதிர்பார்ப்பது, ரபி என அழைக்கப்பட விரும்புவது இவை அனைத்தும் இவர்களின் அன்றாட எதிர்பார்ப்பாய் இருந்தது.

**மூன்று வகையான மனிதர்கள்**

**நாங்கள் சொல்வதைத்தான் செய் வோம், செய்வதைத்தான் சொல்வோம்** என்ற வார்த்தைகள் அரசியல் தரத்தில் அன்றாடம் எதிரொலிக்கும் வார்த்தைகள். இன்றும் இது உண்மையல்ல, அன்றும் (பரிசேயர் காலத்திலும்) இது உண்மையல்ல. அதிகப் பேச்சு ஆக்கபூர்வமான செயலுக்கு வழிவகுக்காது அல்லவா? கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பார்வையில் மூன்று வகையான மனிதர்கள் இருக்கின்றார்கள். முதல் வகையினர் படலி மரத்தைப் போன்றவர்கள். இம்மரம் பூக்குமே தவிர காய்க்காது. இந்த மரத்தைப் போன்றவர்கள் பேசுவார்கள், ஆனால் காரியம் சாதிக்கமாட்டார்கள். பரிசேயர், மறைநூல் அறிஞர் யாவரும் இத்தகையோரே. இவர்கள் பெரும் பேச்சாளர்கள். ஒருபோதும் சாதனையாளர்கள் அல்ல. இரண்டாம் வகை மாமரத்தைப் போன்றவர்கள். இம்மரம் பூக்கவும் செய்யும், காய்க்கவும் செய்யும். இம்மரத்தைப் போன்றவர்கள் பேசவும் செய்வார்கள், காரியமும் செய்வார்கள். இங்கு பேச்சோடு கொண்ட செயலும் உண்டு. மூன்றாவது வகையினர் பலா மரத்தைப் போன்றவர்கள். பலா பூக்காமலே காய்ப்பது போல இவ்வகையினர் பேசாமலே காரியம் செய்வார்கள். முதல் வகையினர் போல் அல்லாமல் இரண்டாம், மூன்றாம் வகையினராக நாமும் வாழ முயற்சிப்போம்.

**தாழ்ச்சியே உயர்வுக்கு வழி**

ஒரு வைரக்கல்லும், கூழாங்கல்லும் பேசிக் கொண்டன. கூழாங்கல் வைரத்தைப் பார்த்துக் கேட்டது. 'எப்பொழுதும் நீ பளபளப்பாக இருக்கிறாயே! உனக்கு மட்டும் எப்படி இது சாத்தியம்?'. அதற்கு வைரம் சொன்னது. 'நீ பளபளப்பாக இருப்பதாக நினைத்துக் கொண்டு பூமியில் சகல நேரமும் கிடந்து பெருமைப்பட்டாய். நான் கறுப்பாக கரியாக இருந்து பூமிக்குள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தவமிருந்தேன். அதற்குப் பரிசாம் இறைமை என்னை வைரமாக்கியது. இப்போது மேலே வந்துள்ளேன்' என்றது.

ஒருவருடைய புகழ்ச்சிக்கும், அவருடைய இகழ்ச்சிக்கும் காரணமாய் அமைவது அவர்களுடைய செயல்களே. அதுவே அவர்களைத் தேர்ந்தறியும் உரைகல். சமூகம் நம்மைச் சரியாக, முறையாக இனம் காண தாழ்ச்சி நிறை நமது செயல்களே அளவுகோல். தாழ்ச்சி எனும் புண்ணியமே நம் உயர்வுக்கு வழிகோலும். இதையே இயேசுவும் 'தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர் (மத். 23 : 12) என்றார் அன்னை மரியாவும் 'தாழ் நிலையில் இருப்போரை ஆண்டவர் உயர்த்துகிறார்' (லூக். 1 : 53) என்று பாடினார்.

நாமும் பரிசேயர்களைப் போல அறிவுரையாளர்களாக, விரிவுரையாளர்களாக மட்டுமே இருந்துகொண்டு தகுதியற்ற தலைவர்களாகி விடாமல் தாழ்ச்சிநிறை பண்புகளால் பிறர் துயர் அறிந்தவர்களாய் வாழ்வோம். 'பிறரை சீர்திருத்துவதை விட தன்னை சீர்திருத்துவதே முதற்கடமை' என்ற பேனாட்சா என்பவரின் கருத்திற்கேற்ப மலர்ந்துள்ள புதிய ஆண்டில் இறையருளால் பெற்றுள்ள பட்டம், பதவி, அதிகாரங்களைத் துன்புறுவோர், வேதனைப்படுவோர், வாழ்வில் சுமைகளால் தடுமாறும் அயலவர் என்போர் மீது அன்புக் கரம் நீட்டி, கருணையும், பாசமும் நிறைந்தவர்களாய் பணி புரிய உறுதி கொண்டு செயற்படுவோம்.

**மனம்** மனம் ஒரு மகத்தான ஆற்றல், மனசு வைச்சு செய்யும் செயல் வெற்றியடைவது உறுதி. இந்த ஆற்றலைப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் வானையும் வளைத்து விடுகிறார்கள். நம் முன்னோர்கள் தொடக்க நாட்களில் அல்லது ஆரம்ப காலத்தில் இல்லாமையிலும், இயலாமையிலும் மனக்குறையின்றி இன்பமாய், குறைகளில் நிறைவுடனும்,மனம் நிறைந்த மகிழ்வோடும்வாழ்ந்தார்கள். இலக்குகளில் போராடச் சக்தி பெற்றார்கள். இன்றைய நவீன மனிதனின் வாழ்வில் ஆசைகள் பெருகப் பெருக, ஏக்கங்கள் கூடக்கூட, ஏமாற்றங்கள் விஞ்சி நிற்கின்றன. அதனால் தான் இலட்சியங்களில் அலட்சியங்கள் நுழைந்துவிட்டன. மனம் என்னும் மந்திரக் கோலைக் கட்டுப்படுத்தி, தேவைகளை மட்டுப்படுத்தி வாழத் தொடங்குவோம். மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள்.

# வழிபாடு வாழ்வாகுமா!!

(சென்ற இதழின் தொடர்ச்சி….)

**திருப்பலியின் ஆரம்பத்தில்**

ஒவ்வொரு குருவும் திருப்பலியை ஒப்புக்கொடுக்கும் முன் தன்னை ஆயத்தம் செய்ய வேண்டும். சில நிமிடங்கள் மௌனமாகஇருந்துஇயேசுவின் தூய பாஸ்கா மறை உண்மைகளைத் தியானித்துத் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவேண்டும். பல மறைமாவட்டங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முன் குருக்களின் கைகளைத் தூய்மைப்படுத்துவதை ஒரு கட்டாயமாக நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

**திருப்பலிக்கான திரு உடை**

திருப்பலிக்கான ஆடை என்பது வழிபாட்டில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. திருவழிபாட்டிலே பயன்படுத்தப்படும் ஆடைகள் வழிபாட்டுக் காலத்தை அடையாளப்படுத்துகின்றன. அவ்வழிபாட்டின் மையக்கருத்தையும் தெளிவுபடுத்துகின்றன, வழிபாட்டினுடைய பண்பை எடுத்துக் காட்டுகின்றன. ஆயர் அல்லது குருவானவர் வழிபாட்டிற்கான ஆடையை அணியும் போது அவர் அகில உலகக் கத்தோலிக்க திருஅவையை பிரதி நிதித்துவப்படுத்துகின்றார். திருவழிபாட்டு சட்டங்களையும் பேணுகின்றார்.

வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தும் உடைகள் பண்டைய கிரேக்க மற்றும்உரோமைஉயர்குடியினரின்வழக்கத்திலிருந்தே பெறப்பட்டன. முதல் நூற்றாண்டுகளில், ஒரு குறிப்பிட்ட சமூக மட்டத்திலுள்ளநபர்களின்ஆடைமுறையே கிறிஸ்தவ வழிபாட்டு முறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் கொன்ஸ்டன்டைனினுடைய (Constantine) திருஅவையின் அங்கீகாரத்திற்கு பிறகும் இந்த நடைமுறை திருஅவையில் தொடரப்பட்டது. இது வழிபாட்டிற்குரிய ஆடையாக மாற்றப்பட்டது. இறுதியாக, 8 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான கரோலிஞ்யன் சகாப்தத்தில் (Carolingian epoch) திருவழிபாட்டிற்கான ஆடைகள் உறுதியான வடிவத்தை எடுத்தன. அவை இன்றும் அதே அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகின்றது.

ஆரம்ப காலங்களிலே ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுக்கு முன் திருப்பலிக்கான ஆடை அணியும் போது சில செபங்களைச் சொல்லுவார். இந்த செபிக்கும் பழக்கம் இன்னும் இன்றும் பல குருக்களிலே காணப்படுகின்றது. திருப்பலி ஆடை அணியும் போது ஒவ்வொரு வகையான படிநிலையிலும் இந்த செபங்கள் சொல்லப்படும். (கீழே குறிப்பிடப்படும் செபங்கள் பரிசுத்த பாப்பரசர் 23ம் ஜோவான் அவர்களின் 1962ம் ஆண்டு வெளிவந்த "Missale Romanum" எனும் திருப்பலி நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது). முதலாவதாகக் குருவானவர் திருப்பலிக்கான ஆடைகளை அணியும்முன் கரங்களைக் கழுவுவார்.

1. குருவானவரின் கரங்களைக் கழுவும் போது சொல்லப்படும் செபம்: ஆண்டவரே, எல்லாக்கறைகளிலிருந்தும்என்னைதூய்மைப்படுத்தும். இதனால் என் உடல் மற்றும் உள்ளத் தூய்மையுடன் நான் உமக்குப் பணிபுரிய என் கரங்களுக்கு நல்லொழுக்கத்தைத் தாரும்.

2. கழுத்துத் துகில் (Amice) அணியும் போது சொல்லப்படும் செபம்: ஆண்டவரே, மீட்பின் கவசத்தை என்மேல் வைத்தருளும். இதனால் சாத்தானின் தாக்குதல்களை நான் வெல்வேனாக.

3. நீண்ட வெண்ணாடை (Alb) அணியும் போது சொல்லப்படும் செபம்: இந்த நீண்ட வெண்ணாடை திருமுழுக்கின் போது பெற்றுக்கொண்ட வெண்ணிற ஆடையை அடையாளப்படுத்துகின்றது. ஆண்டவரே, என்னை வெண்மையாக்கி, என் இதயத்தைத் தூய்மைப்படுத்தும் செம்மறி ஆட்டின் இரத்தத்தால் தூய்மையாக்கப்படுவதன் மூலம் விண்ணக மாட்சியை நான் பெற்றுக்கொள்வேனாக.




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

4. கயிறு (Cinture) அணியும் போது சொல்லப்படும் செபம்: ஆண்டவரே, தூய்மையின் கயிற்றின் மூலம் என்னைக் கட்டிக்கொண்டு, கற்பு எனும் நற்பண்பு என்னுள் நிலைத்திருக்கும்படி என் இதயத்தில் பற்றியெரியும் ஆசை எனும் நெருப்பைத் தணிப்பீராக.

5. மனிப்பிள் (Maniple) அணியும் போது சொல்லப்படும் செபம்: ஆண்டவரே, துன்பத்தையும் கண்ணீரையும் தாங்கும் தகுதியடைவேனாக. இதனால் என் உழைப்பின் பயனை மகிழ்வுடன் பெற்றுக் கொள்வேனாக.

6. தோள்துகில் (Stole) அணியும் போது சொல்லப்படும்செபம்: ஆண்டவரே, எங்கள் ஆதிப் பெற்றோரின் பாவ வாழ்வினால் நான் இழந்த அழியாத ஆன்மாவை மீட்டெடுப்பீராக. உம்முடைய புனிதமான மறை உண்மைகளை அணுகுவதற்கு நான் தகுதியற்றவனாய் ஆகும் போது, நான் இன்னும் உமது முடிவில்லாத மகிழ்ச்சியைப் பெறுவேனாக. வழிபாட்டில் தோள்துகில் மிகவும் மகத்தான, முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், இது வேறு எந்த ஆடைகளையும் விட, ஒருவரின் திரு நிலைப்படுத்தப்பட்ட நிலையைக் குறித்து நிற்கின்றது.

7. திருப்பலிக்கான ஆடை (Vestment or Chasuble [Planeta in Latin]) அணியும் போது சொல்லப்படும் செபம்: "என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது" என்றுகூறிய ஆண்டவரே, உமது அருளைப் பெறுவதற்கு நான் அதைச் சுமக்கும்படி செய்வீராக.

செபிப்பது ஒருவரின் மனதைக் கடவுளிடம் உயர்த்துவது போலாகின்றது. இந்த செபங்கள் விவிலிய ஆன்மீகத்தால் ஈர்க்கப்பட்டு பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற புனிதர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. தகுந்த ஆயத்தத்துடன் திருப்பலியில் பங்குபெறுவதும் மக்களின் மீட்பிற்காகச் செபிப்பதும் பலி செலுத்தும் குருவானவரின் கடமையாகின்றது. இதை உணரவேண்டும். (தொடரும்…)

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது…

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

## திருக்குடும்பம்

இவர்கள் வாழ்வில் எளிமை, மனிதமாண்பு, சுதந்திரம், அன்பு, ஐக்கியம், செபம், ஆட்தன்மை உறவு, கடின உழைப்பு, விடாமுயற்சி என்பன காரண காரியங்களைத் தேடாமல் பணிவோடு இறைத்திட்டத்திற்குப் பதிலிறுக்க சக்தி அளித்தன. இவர்கள் மூவரும் இறைவன் தங்களை உருவாக்க முற்றுமுழுதும் தம் வாழ்வை இறைவன் கையில் விட்டுவிட்டவர்கள்.

இறைஆவி யின் வழிநடத்துதலுக்குச் செவிமடுத்து பிரமாணிக்கத்துடன் வாழ்ந்தவர்கள். இறைசித்தத்திற்குக் கீழ்ப்படிவது ஒன்றே மேலானது என்பதை வாழ்வாக்கியவர்கள். இறையன்பில் நெருக்கமான ஐக்கியம் கொண்டவர்களாக உள்ளத்திலும், ஆன்மாவிலும் ஒன்றுபட்டு திரித்துவ அன்பின் பிரதிபலிப்பாக வினங்கியவர்கள்.

**ஆதிக்கிறிஸ்தவ சமூகம்**

தூயஆவியானவரின் பொழிவின்பின், திருமுழுக்குப்பெற்றவர்கள் திரித்துவ இறைவனும், திருக்குடும்பமும் வாழ்ந்த "ஒரே குடும்பம்" என்ற அன்பின் விசுவாசத்தின் வாழ்வை ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர். இவர்களின் வாழ்க்கை முறையைத் திருத்தூதர்பணி நூல் இவ்வாறு கூறுகின்றது." இவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்." (2:42-44) "நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது." (4:32) இவ்விதமான ஒருமைப்பாட்டின் வாழ்க்கை முறையால் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவித்து ஒரே தந்தையின் உறவுக்குள் அனைவரையும் இணைக்கத் தம்மை முழுவதும் அர்ப்பணித்தார்கள்.

மேற்கூறப்பட்ட வாழ்க்கை முறையை ஊற்றாகக் கொண்டு திருக்குடும்ப சபையானது பல்வேறு நாடுகளிலும், மொழி, இன, மத, பண்பாட்டுக் கலாசார, நிலை வேறுபாடுகளைக் கடந்து வாழ்ந்து வருகின்றது. குழுக்களில் வாழும் இவர்கள் ஒரே மனப்போக்கினாலும், ஒரேநோக்கினாலும், ஒரே ஆன்மீகத்தினாலும் உந்தப்படுகின்றார்கள் ஒன்றிணைந்து வாழ்வதனாலும், ஒருவரை ஒருவர் நிறைவு செய்வதனாலும் கிறிஸ்துவின் மறை உடலாகிய திருஅவையில் பணியாற்றி கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகத் திகழ்கின்றார்கள். கிறிஸ்துவைத் தம் வாழ்வாலும், வார்த்தையாலும் உலகிற்கு அறிவிக்கவும், இறையரசின் விதைகளை விதைக்கவும் ஒருமித்துத் தம்மைக் கையளிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் அர்ப்பண வாழ்வினால் காலத்திற்குப் பொருத்தமான முறையில் நிறுவுனரின் அருங்கொடையை வாழ்வதற்கும், அதனைப் பரப்பி ஏனையோருக்கு அறிவிப்பதற்கும் உரிமையுடையவர்கள். அத்துடன் நிறுவனத்தின் ஒற்றுமைக்கும், உயிராற்றலுக்கும் இவர்களே பொறுப்பாளர்கள்.

அருட்சகோதரி லூமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

1820ம் ஆண்டு மூன்று இளம் பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட திருக்குடும்ப சபையானது மேலே குறிப்பிட்ட இலக்கையும், நோக்கையும் கண்முன் கொண்டு பயணிக்கின்றது. இன்று இச் சபையானது பாரிய விருட்சமாகி பலகிளைகள் விட்டு பலரையும் தன் நிழலில் இளைப்பாறச் செய்கின்றது.

### விழுதுவிடும் கிளைகள்

**அன் று** - இயேசுவின் கிளை

**இன்று** - சபையிற் சேர்ந்திருந்த குருக்களை உள்ளடக்கியது.

**அன் று** - மரியாளின் கிளை

**இன்று** - சபையிற் சேர்ந்த எல்லா பெண் அங்கத்தவர்களையும் கொண்டிருந்தது.

**அன்று** - சூசையப்பர்கிளை

**இன்று** - சபையில் சேர்ந்த பொதுநிலையினரை உள்ளடக்கியது.

### இன்று எம்சபையில் உள்ள அழைத்தல்கள்:

**தியானயோகக் குழு:**

இறைவனைத் தியானித்து, அவருடன் ஒன்றித்து, அமைதியில் செபித்து, ஆராதனை புரிந்து உலகிற்காகப் பரிந்துபேசி, நாளாந்த வேலைகளை பலிப்பொருளாக்கி, ஆண்டவர் இயேசுவின் அற்புதகாட்சியின் ஆசீருக்கு நன்றிக் கீதம் பாடியே வாழும் துறவியர் குழு.

**திருமடசார்பற்றோர் குழு.**

உலகில் நின்று பிரிவுபடாமல் நற்செய்தி அறிவுரைகாட்டும் வழியில் விரத்தத்துவம், ஏழ்மை, பணிவு வாக்குத்தத்தங்களால் மறைவான வாழ்வால் உலகில் புளிக்காரமாக வாழும் குழு.

(தொடரும்…)

# கிறிஸ்தவன் என்பவன்...

ஒரு அகராதியில் கிறிஸ்தவன் என்பதற்குப் கொடுக்கப்பட்ட விவரணம் மற்றும் அர்த்தம் என்னவெனில், "இயேசுவில் விசுவாசம் வைத்து அவரையே கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்பவர் அல்லது இயேசுவின் போதனைகளின் அடிப்படையில் இயேசுவை விசுவசிக்கிற நபர் அல்லது இயேசுவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்" என்பதாகும்.


இப்படிப் பல அகராதிகள் பல நிலைகளில் விவிலியம் வரையறுத்துக் கூறுகிறது போல அல்லாமல் வித்தியாசமான நிலைகளில் அர்த்தங்களை கொண்டு வருகின்றன. புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்கள்" என்கிற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப் பட்டுள்ளது (தி.ப: 11:26 - 26:28:1 பேதுரு 4:16). முதன்முதலாக இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றிய அந்தியோகியாவில் தான் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (தி.ப: 11:26). ஏனென்றால் அவர்களுடைய நடத்தை, செயல்கள், பேச்சு ஆகியவை கிறிஸ்துவைப் போலவே இருந்தன. "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தையின் எழுத்தியல் பிரகாரமான அர்த்தம் "கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்" அல்லது "கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள்" என்பதாகும்.

துரதிஷ்டவசமாக, காலப்போக்கில், "கிறிஸ்தவன்" என்னும் வார்த்தை அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. உயர்ந்த தார்மீக மதிப்பைக் கொண்டுள்ளவர்கள், மத சம்பந்தப்பட்ட நிலையில் மெய்யாகவே கிறிஸ்துவைப் பின்பற்றாதவர்கள் கூட இப்படி அழைக்கப்படலாயினர். அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். காரணம் அவர்கள் கிறிஸ்தவ சபைக்குப் போகிறார்கள் அல்லது கிறிஸ்தவ நாடுகளில் வாழ்கிறார்கள். சபைக்கு போவதாலோ அல்லது நல்ல மனிதராக வாழ்வதாலோ ஒருவரைக் கிறிஸ்தவராக்கிவிடாது. ஒரு கிறிஸ்தவ சபையில் உறுப்பினராக இருப்பதினால், கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளுதலினால், சபையினுடைய வேலைக்குக் கொடுப்பதினால் நீங்கள் கிறிஸ்தவராகி விடமுடியாது.

நாம் செய்யும் நற்செயல்கள் ஒருபோதும் கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டு கிறிஸ்துவோடு நாம் ஐக்கியப்பட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட வழி வகுக்காது என திருவிவிலியம் கூறுகிறது. "நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டார்" (தீத்து 3:5). ஒரு கிறிஸ்தவன் என்பவன் தேவனாலே மறுபடியும் பிறந்தவனாவான் (யோவான்3:3யோவான்3:71பேதுரு1:23) மற்றும் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்தவனாவான். "நீங்கள் அந்த அருளாலே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல மாறாக இது கடவுளின் கொடை" (எபேசியர் 2:8).

ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்பவன், இயேசுக்கிறிஸ்துவின் ஆள்தன்மை மற்றும் அவரது செயல்களில் முழு விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வைத்தவனாவான். மேலும், அவரது சிலுவை மரணம் மற்றும் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசம் வைக்கின்றவனாய் இருப்பான். "அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" என்று யோவான் 1:12 கூறுகிறது. ஒரு உண்ண்மயான கிறிஸ்தவனின் அடையாளம் என்னவென்றால், அவன் மற்றவர்களை நேசிக்கிறவனாகவும் கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்படிகிறவனாகவும் இருப்பான் (1 யோவான் 2:4, 10). ஒரு உண்மையான கிறிஸ்தவன் மெய்யாகவே கிறிஸ்துவின்பிள்ளையாக இருக்கிறான். கிறிஸ்தவ குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக்கிறான் மற்றும் இயேசுக்கிறிஸ்துவில் புதிய வாழ்வைப் பெற்றவனாகவும் இருக்கிறான்.

## விடா முயற்சி



இருண்டு கிடக்கும் உள்ளக நினைப்பை
தீ மூட்டி எரித்திடுங்கள்
மருண்டதெல்லாம் பேயென்றஞ்சும்
அக்குணத்தை விரட்டிடுங்கள்

சுருண்டதெல்லாம் பாம்புமில்லை
திரண்டதெல்லாம் பாலுமில்லை
ஆராய்ந்து பாராமல்
வரும் முடிவு உண்மையில்லை

விமர்சனங்கள் அத்தனையும்
விளம்பரங்கள் என்றெண்ணுங்கள்
ஊர்ச்சனங்கள் வாய்ப்பேச்சு
உண்மையில்லை நம்புங்கள்

முடியும் வரை முயன்றால்
முடியாது என்றொன்றில்லை
இறுதியாக ஓடினாலும்
இறுதிவரை ஓடியது பெருமைதான்

**சித்தார்த்தன்**

# நீராவியும் புட்டுக்குழலும்



**அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி**

எனது முறைக்காகக் காத்திருக்கும்போது சிதறிக்கிடந்த பத்திரிகைப் பக்கங்களைப் புரட்டினேன். இரு சிறுவர்களில் ஒருவனுக்கு அரைவழி கடந்திருந்தார், திருத்துநர். காத்திருந்தவன் அண்ணன் போல சாயல் தந்தான். அவர்கள் புறப்பட்டால்தான் நான் சிம்மாசனம்' ஏறலாம். வந்தவர் பரிச்சயமான விரிவுரையாளர். கலகலப்பாக உரையாடக்கூடியவர். "ப்றீ கிடைக்கும்போது வந்தால்த் தான் உண்டு. அதான் வெயிலையும் பாக்காம வெளிக்கிட்டு வந்தன்" என்றார் புன்முறுவலுடன்.

"அண்டைக்கு உங்கட பேச்சு நல்லா இருந்திது. சில விடயங்களை வித்தியாசமாய்ச் சொன்னாத்தான் எடுபடும்" என விமரிசனப் பாராட்டுத்தந்தார்.

"ஆனால் விஞ்ஞானபீட விரிவுரையாளருக்கு அது பிடிக்கவில்லைப் போலும், அவர் கொஞ்சம் குழம்பிப்போனார். கொஞ்சம் கோபமும் வந்திற்றுது போலக் கிடந்திது" என்றேன் பதிலுக்கு.

"அப்பிடி என்னதான் சொன்னீங்க?" என விடுப்பு விசாரித்தார், திருத்துநர். சாராம்சம் இதுதான்: இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் நாம் நம் இலக்கிய மாந்தர்களில் கற்பில் சிறந்தவள் இவளா? அவளா? எனப் பட்டிமன்றங்களையும், வீரத்தில் சிறந்தவன் இவனா? அவனா? என வழக்காடு மன்றங்களையும்நடத்திக்கொண்டேயிருப்போம்? எப்பொழுது நாமும் உலக விஞ்ஞான அறிவியல் இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்யப் போகிறோம்? எப்பொழுது நாமும் சர்வதேச அரசியல், பொருளாதார இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்யப் போகிறோம்?

நம் குடி மூத்தகுடி. எத்தனையோ இனக்குழுமங்கள் நாகரிக நடை பயிலுவதற்கு முன்பாகவே நம் இனம் நாகரிகத்தின் உச்சம் கண்டிருந்தது உண்மை. எத்தனையோ இனக்குழுக்கள் இன்னும் மலைக் குகைகளில் ஒதுங்கியிருந்த காலத்திலேயே, தமிழர் நாம் கலை வளர்க்க முச்சங்கங்கள் அமைத்திருந்தோம் என்பது நம்பெருமையே. ஆனால், பின்புஎன்னதான் சாபமோ, அது ஸ்தம்பித்துப்போனது!

இலக்கணத்தில், இலக்கியத்தில், கலையில், தொழில்நுட்பத்தில், மருத்துவத்தில், போர்த்திறனில் வளர்ச்சி கண்டிருந்த நாம் இடைநடுவில் நிறுத்திக்கொண்டோமா? அல்லது நாம் அவ்வாறான ஒரு தேக்க நிலைக்கு இயற்கையாலும் வரலாற்றாலும் நிர்ப்பந்திக்கப்பட்டோமா? நறுக்கென்று....


ஆயிரக்கணக்கான வருடங்களாக நாம் நீராவியைக்கொண்டு இன்னும் உணவுதானே தயாரிக்கின்றோம். புட்டவிப்பதற்கென்றே நாம் காலங்காலமாக பயன்படுத்தும் நீராவியைக்கொண்டு அவன் கப்பல் விட்டான், புகையிரதம் விட்டான், இப்பொழுதோ, நீராவியையும் விட்டுவிட்டான். தமிழ் சினிமா ஒன்றில் சொல்லப்பட்டதுபோல நாம் மாத்திரம் இன்னும் புட்டுப் பானையுடனேதான்இருக்கிறோம். ஒரேயொரு முன்னேற்றம்: புட்டுக்குழல் சுட்டுவிடக் கூடாது என்பதற்காக குழலைச்சுற்றிக் கயிறும் துணியும் சுற்றக் கற்றிருக்கிறோம். முன்னேற்றம்!

பெருமைவாய்ந்த பழம்பெரும் இலக்கியங்களை மாத்திரமல்ல, இன்றைக்கும் தமிழர் தரணிக்குத் தரவேண்டியவை பலவுண்டு. இறந்தகாலப் பெருமை மாத்திரம் போதுமா? இருபத்தியொராம் நூற்றாண்டிலும் நாம் உலகிற்குத் தரவேண்டியவை ஏதுமில்லையா? தமிழுலகிலிருந்து எதுவுமில்லையென ஒரேயடியாகக் கூறிவிடமுடியாது. இருப்பின், அவற்றை நாம் பட்டியலிட்டுப் பார்க்கவேண்டிய தேவையுமிருக்கிறது.

ஈழத்தமிழரின் அடையாளம் கல்வியென்றால், எமது பலமே படிப்பறிவு என்றால், இன்றைய திகதியில் நாம் உலகிற்கு வழங்கும் பங்களிப்பு என்ன? நமது உயர் கல்வி நிறுவனங்கள், வெறும் பகிடி வதைகளோடும், விளையாட்டுப் போட்டிகளோடும், உல்லாசச் சுற்றுலாக்களோடும், பகிஷ்கரிப்புகளோடும், பட்டமளிப்பு விழாக்களோடும், வருடாந்த பிரியாவிடைக் கொண்டாட்டங்களோடும் நிறுத்திவிடுகின்றனவா? ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புப் புத் தாக்கங்களிற்கும் வழிதிறக்கவேண்டிய கடமையும் தேவையும் பொறுப்பும் நாம் நம்பியிருக்கும் நம் கல்வி நிறுவனங்களுக்கு இல்லையா?

"கல்விச்சாலைகளில் இடம் பிடிப்போம், பாடம் படிப்போம், சான்றிதழ் வெல்வோம், புகைப்படங்களோடு வெளியேறுவோம். வேலை பெறுவோம், வாழ்க்கைத் துணை தேடி புதுக் குடும்பமமைப்போம்...." இவ் வளவுதானா நம் கல்வியின் வீச்சம்? 'புட் பக விமானத் தொழில்நுட்பம் எங்களிடம் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே இருந்தது' என நம் வேலிகளுக்குள் நின்றுகொண்டு வீராப்பு மாத்திரம் பேசிக்கொண்டிருந்தால் போதுமா? வரலாற்றில் நாங்கள் வீரம் செறிந்தவர்களைக் கொண்டிருந்தோம். காலங்கடந்தும் நின்றுநிலைக்கும் கலை இலக்கியப் பொக்கிஷங்களைப் பெற்றிருந்தோம். நமது முன்னோரின் கலையும் பண்பாடும் எண்திசையும் பரவியிருந்தன. உண்மைதான்! கேள்வியெல்லாம் நாம் நமது சமகால உலகிற்குக் கொடுக்க வேண்டியிருப்பவை எவை?. நம்மால் அது முடியுமா?

## குறுக்கெழுத்துப் போட்டி 01



(மத்தேயு நற்செய்தி)

**இடமிருந்து வலம்**

1. இயேசுவை இவருடைய மகனென்றும் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது
7. மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் காலம் வரும்போது அவர்களும் இப்படி இருப்பார்கள்
8. உங்களை இது பாவத்தில் விழுத்தினால் அதனை வெட்டி எறிந்து விடுங்கள் (4 எழுத்து)
9. பேதுருவின் மாமியார் நோய் நீங்கியதும் இயேசுவுக்கு இதனைச் செய்தார். (4எழுத்து)
13. பிள்ளைகளுக்கு உரிய இதனை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல. (3எழுத்து)

**வலமிருந்து இடம்**

6. இயேசுவுக்கு இவர்கள் பலபேர் இருந்தார்கள் (குழம்பியுள்ளது)
11. திரண்டிருந்த மக்களை இயேசு கண்டபோது அவர்கள் இவரில்லாத ஆடுகள் போலிருந்தார்கள்

**மேலிருந்து கீழ்**

1. இயேசு சோதிக்கப்பட்டபோது சாத்தானிடம் இவருக்குமட்டும் வணக்கம் செய் என்றார் (மெய் எழுத்தில் முடியும்)
2. இவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்காதீர்கள் (3எழுத்து)
3. முதலில் அவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு பின்பு வந்து இதனைச் செலுத்துங்கள்
4. பேதுருவின் வேறு பெயர் (3எழுத்து)
5. அனைத்துக்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு உரிய இதனையும் நாடுங்கள்
9. வழியோரம் விழுந்த விதைகளை இவை விழுங்கிவிட்டன
10. சிறுபிள்ளைகளைப் போன்றோருக்கு இது உரியது என்றார் இயேசு
12. காற்றையும் கடலையும் கடிந்துகொள்ள இது உண்டாயிற்று
13. இயேசு இதன் மூலமாகவும் மக்களுக்குப் போதித்தார்
14. இயேசுவின் காலத்தில் இவன் குறுநில மன்னன்
15. நான் உலகிற்கு அமைதியையல்ல இதனையே கொண்டு வந்தேன் என்றார் இயேசு. (வேறு முறை)

**விதிமுறைகள்:**

- பாதுகாவலன் பத்திரிகையில் வரும் போட்டிப் படிவங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஒருவர் ஒரு படிவமே அனுப்ப முடியும். தெளிவான கையெழுத்தில் விடைகள் அமைய வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
குறுக்கெழுத்துப்போட்டி
பாதுகாவலன்
புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# புனிதர்களாகிட மறை தூதுவராகிடுவோம்
# தேசிய திருப்பாலத்துவ சபை தினம் - 2020

## யாழ் மறை மாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநரின் செய்தி



2020 ஆம் ஆண்டு தேசிய திருப்பாலத்துவ சபைத் தினம் "புனிதர்களாகிட மறை தூதுவராகிடுவோம்" என்ற கருப்பொருளில் மலர்கின்றது. "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்கவேண்டாம்" என கிறிஸ்து இயேசு குழந்தைகளை அரவணைத்தார். சிறுவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி அவனைக் கடலுக்குள் தள்ளுவது அவனுக்கு நலமாய் இருக்குமென" இடித்துரைத்த இயேசு அங்கு சிறுவர் உரிமைகளை நிலைநாட்டினார். பாலகர் வாயினால் என்னை வெளிப்படுத்தினீர் என வரும் திருமறைப் போதனை சிறுவர்களின் புனிதத்துவத்தை வெளிப்படுத்துகிறது. இந்நிலையில் சிறுவர்கள் புனிதர்களாகிட அவர்கள் மறை தூதுவராகத் தம்மை மாற்றி அமைக்க வேண்டும்.

புனிதம் என்ற சொல் இன்று வெறும் பேச்சளவிலேயே காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் மாசு மறுக்களும், வடுக்களும், களங்கங்களும் பரந்து கிடக்கின்ற நம் சமுதாயத்தில் புனிதத்துவம் தழைப்பதற்கு அத்திவாரமாகத் திகழ வேண்டியவர்கள் சிறுவர்களேயாவர். இத்தகைய சிறுவர்கள் கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் ஆழமாகக் கட்டியெழுப்பப்படவேண்டியவர்களாக இருக்கின்றனர். பெரும் சவால்களுக்கு இன்றைய சிறுவர் உலகம் முகம் கொடுத்து வருகின்றது. உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான பல்வேறுபட்ட துஷ்பிரயோகங்கள் சிறுவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

**"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி**
**இந்த நாடே இருக்குது தம்பி**
**சின்னஞ்சிறு கைகளை நம்பி**
**ஒரு சரித்திரம் இருக்குது தம்பி"**

என சிறுவர்களின் முக்கியத்துவத்தை நமது முன்னோர்கள் எடுத்துரைத்திருந்தனர். ஆனால் அவற்றையெல்லாம் மறந்த நிலையில் சிறுவர்களின் வளர்ச்சி வேர்களுக்கு வெந்நீர் ஊற்றும் மற்றும் கோடரி வைக்கும் செயற்பாடுகளில் இன்று நாம் முனைந்து நிற்கின்றோம். இது வேதனை தரும் விடயமாக மட்டுமல்ல, எதிர்கால உலகின் வளர்ச்சிக்கு அபாயச் சங்காகவே ஒலிக்கின்றது.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் திருப்பாலத்துவ சபைகள் நிறுவப்பட்டு சிறுவர்கள் வழிதவறாது விசுவாசப் பாதையிலும், நற்பாதையிலும் பயணிக்க அவர்களுக்கான களங்கள் பல கோணங்களில் அமைக்கப்பட்டு வருகின்றது. அவற்றை சிறுவர்கள் பயன்படுத்திக் கொள்வதுடன், திருநிலையினரும், பொதுநிலையினரும் இவ்விடயத்தில் சிறுவர்களுக்கு வெறும் கைகாட்டிகளாக நின்று செயற்படாது வழிகாட்டிகளாக அவர்களைப் பசும் புற்தரையில் நடத்திச் செல்லவேண்டும். இந்நிலையில் சிறுவர்கள் ஒவ்வொருவரும் தம்மை மறைதூதுவர்களாக்க முன்வரவேண்டும். இறை அழைத்தலுக்கு செவிமடுத்து நற்கனி கொடுக்கும் விருட்சங்களாக சிறுவர் உலகம் செழிக்கவேண்டும். நன்மையை நோக்கி இறை பணியை நோக்கி "இதோ நான் வருகிறேன்" என ஒவ்வொரு சிறுவர் உள்ளமும் வீறுநடைபோட்டால்

**திருப்பாலத்துவ சபைத் தினம் 19.01.2020**

சிறுவர்கள் புனிதர்களாவதுடன், நாமும் நம் சமூகமும், நம் தேசமும் முழு உலகமுமே இன்பக் கானான் வாழ்வை இவ்வுலகில் வாழலாம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்

**அருட்பணி. S.A. றொஷான்**

வருடந்தோறும் தை மாதத் தின் இறுதி ஞாயிறு தினத்தை இறை வார்த்தையின் ஞாயிறு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளார். சிறுவர்கள் இறைவார்த்தைக்கு செவிமடுத்து இறை வார்த்தையின் வழியில் பயணம் தொடர அழைக்கப்படுகின்றார்கள். இறைவார்த்தை எமது வாழ்வுக்கு வழிகாட்டியாகவும், எமது பாதைகளுக்கு வெளிச்சமாகவும் இருக்கின்றது. அத்துடன் இறைவார்த்தை என்பது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போன்றது. அது தன் பயனைக் கொடுக்காது வெறுமையாக திரும்பி வராது. இத்தகைய சக்தி மிக்க இறைவார்த்தை சிறுவர்களுக்கு உடல்உளசக்தியாக அவர்கள் உண்ணும் உணவோடு சேர்க்கப்படவேண்டும். இறைவார்த்தை என்பது வாழ்வு தரும் வார்த்தை ஆகையால் இறைவார்த்தை வாழ்வாக்கப்படவேண்டும், வாழப்படவும் வேண்டும். சிறுவர்கள் முழு மனதுடன் இறைவார்த்தையை செவிமடுப்பதற்கு தம் மனங்களை நல்ல விளை நிலங்களாக உழுது பண்படுத்திக்கொண்டால் அதில் தூவப்படும் இறைவார்த்தைகள் நூறத்தனையாய் பலன் கொடுக்கும். தேசிய திருப்பாலத்துவ சபை தினம் சிறக்கவும் சிறுவர்களின் எதிர்கால வாழ்வு இறை விசுவாசத்தின் ஆழத்தில் கட்டியெழுப்பப்படவும், சிறுவர்கள் புனிதத்துவத்தை நோக்கி மறைபோதகர்களாக சிறுவயது முதல் வாழவும் இறை அருள் வேண்டி ஆசித்து வாழ்த்துகின்றேன்.

# நல் எண்ண விளைவுகள்

நல்ல எண்ணங்கள் நல்ல விளைவுகள்ளையே தரும். எண்ணங்களிலிருந்தே வாழ்வு பிறக்கின்றது. உயர்ந்த எண்ணங்களோடு வாழ்ந்தவர்களே உயர்ந்தவர்களாக, உத்தமர்களாகப் பிரகாசிக்கின்றார்கள். உலகில் உயர்ந்தவர்கள், சமூகத்தில் சரித்திரம் படைத்தவர்கள், சாதனையாளர்கள் எனப் பெயர்பெற்றவர்கள் எல்லோரும் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டோராய் திகழ்ந்தனர் என்பதே உண்மையாகும்.

உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு மனித மாண்புக்கு மறுவடிவம் கொடுத்து வாழ்ந்த திருத்தந்தை 2ம் யோண் பவுல், திருத்தந்தை 23ம் அருளப்பர், அன்னை திரேசா போன்றோர் நடப்புக்காலத்தில் புனிதர்களாகத் திருஅவையினால் பிரகடனப்படுத்தப்பட்டார்கள்.

சமத்துவத்திற்காகப் போராடி, பல தடவைகள் சிறைச்சாலை சென்று, ஈற்றில் நல்லாட்சி செய்து, வரலாற்றில் தடம் பதித்தார் நெல்சன் மண்டேலா. இந்தியாவில் தீண்டாமையை எதிர்த்துப் போராடிய மகாத்மா காந்தி துப்பாக்கிக்கு இரையாகி, நீங்காப் பேரின்பம் துய்த்தார்.

ஆரோக்கியமற்ற எண்ணங்கள் ஆரோக்கியமற்ற வில்ளைவுகளையே தரும். உதாரணமாக குடற்புண், குடல் இறக்கம், இரத்த உயர் அழுத்தம், உடல் - உள நோய் போன்றவற்றை ஆரோக்கியமற்ற சிந்தனைகளின் பயனாக எழும் விளைவுகள் எனலாம். மேலும் பொறாமையி-னால் மற்றவர்களை வருத்தி அழவைத்தல், மற்றவர்களின் நற்பெயரைக் கெடுத்தல், பிள்ளைகளின் முன்னேற்றத்தைத் தடுத்தல், குறைகளையே கூறி மற்றவர்களுக்கு எரிச்சலூட்டல் போன்றவை ஆரோக்கியமற்ற விளைவுகளாகும். ஆரோக்கியமற்ற எண்ணங்கள் தன்னையும் பிறரையும் அழிக்கும் நிலைக்கே இட்டுச் செல்லும்.

ஒரு கதை, ஒரு வேடன் வழமைபோல் ஓர் அடர்ந்த காட்டினுள் வேட்டையாடச் சென்றான். அப்பொழுது ஒரு முனிவர் தென்பட்டார். "எங்கே போறீர்கள்?" என்று வேடன் அவரிடம் கேட்டான். "நான் கடவுளைக் காணப் போகின்றேன்" என்றார்

முனிவர். "ஐயோ வேண்டாம். இந்த இடத்தை விட்டுப் போங்கள். கரடி, புலி, சிங்கம் போன்ற விலங்குகள் வந்து உங்களைத் தின்றுவிடும்" என்று வேடன் கெஞ்சினான்.

முனிவரோ காட்டை விட்டு வெளியேறப் பின்வாங்கினார். "கடவுளே தயவுசெய்து காட்சிகொடுங்கள். எனக்காக அல்ல இந்த முனிவருக்காக வெளியே வாருங்கள்" என்று வேடன் வேண்டுதல் செய்தான்.

உடனே கடவுள் காட்சி கொடுத்தார். முனிவர் வேடனின் துணிச்சலான பக்தியைப் பாராட்டி, கடவு ளுக்கு நன்றி கூறினார். மற்றவர்களின் நன்மைக்காகச் சிந்திப்பது, செயற்படுவது எப்பொழுதும் நல்ல விளைவுக ளையே தோற்றுவிக்கும். மற்றவர்களின் நன்மைக்காகச் சிந்தித்துச் செயற்படும் நல்ல உள்ளங்கள் அழியாத கோலங்களாக



**அருட்கலாநிதி. வின்சன் பற்றிக் அ.ம.தி**

மனித மனங்களில் நிலைத்து, குன்றா மகிழ்வுடன் குவலயத்தில் குதூகலித்து நிற்பார்கள். கொடுத்துக் கொடுத்துக் குறையாத வள்ளல்கள் இவர்களே!

மற்றவர்களை மையப்படுத்தி வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்கள். அவர்கள் அழியாத ஓவியங்களாய் மனித மனங்களில் வடிக்கப்படுவார்கள். அவர்கள் வரலாற்றில் என்றும் இடம்பிடிப்பார்கள். மேலும், நம்பிக்கையீனத்தை நலிவுறச் செய்ய நாளாந்தம் முயற்சியெடுத்து, எம் உள்ளங்களில் நல் விளைவுகளைத் தோற்றுவிப்போம்.

மற்றவர்களின் நன்மைக்காகச் சிந்தித்து, செயற்படும்
நல்லவர்கள் என்றும் வல்லவர்களே!

# தையினை தழைத்திட செய்திடுவோம்



மகத்துவம் பெற்றது இத் தமிழ் மண்
உழவரின் பாதம் பட்டு பதம் பெற்றதால்

சகலமும் சாதாரணமாய் சஞ்சாரம் செய்கையில்
பவளமும் பொன்னுமாய் விளைவித்தது இம்மண்

சயனத்தை துறந்து வான் அயனம் பொழிந்ததால்
தேன் மழையை புசித்த நிலமகள் செழித்தாள்

உழைத்தவன் இல்லம் மகிழ்ச்சியில் மலராய் விரிய
மனைவர வேண்டி நெல் மகள் நெகிழ்ச்சியில் இருக்க

உழைப்பின் அயர்ச்சியால் சோர்ந்திருந்த விவசாயி
குதிராய் குவிந்த நெல்மணிகளால் மகிழ்ந்தான்

குழந்தையாய் நினைத்து வளர்த்தவன் முதுகில்
குதிரான நெல் மகள் அவன் இல்லம் நோக்கி

குஷியாய் குதூகலித்தவாரே கும்மியுடன் - குடும்பத்தில்
குங்குமம் மஞ்சள் சூடி, சூடத்தோடே குடியேறினாள்
பொன்னாய் விளைந்த நெல் மணிகளுக்கு
பட்டாபிஷேகம் செய்ய நினைத்த விவசாயி

கவனமாய் நாள் பார்த்து இப்புவனமே போற்ற
புதுப் பானையில் பொங்கலிட்டு பெரும் பேறு பெற்றான்

தோழனாய் இருந்த ஏர் எருதுகளுக்கு - இந்த
அகிலமே போற்றும் ஆற்றல் மிகு விழா எடுத்தான்

பொங்கலோ பொங்கல் என்று அங்கம் குளிர
புதுக் கீதம் பாடி தையினை தழைத்திட செய்திடுவோம்.




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(கண்ணன், வவுனியா)*
**கேள்வி: அண்மையில் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய விடயம் என்ன?**
**ப:** கண்ணன், வடிவேலின் படத்துடன் வந்த ஒரு வரிச் சிந்தனை: 'படிக்கக் காசில்லாம படிக்கிறத நிறுத்துனவங்க நிறையப் பேர்! ஆனா, குடிக்கக் காசில்லாம குடியை நிறுத்தினதா சரித்திரமே இல்ல!'

*(அன்ரனி, மன்னார்)*
**கே: வெளிநாட்டு மாப்பிள்ளைகளைத்தான் உள்நாட்டு மாமிமார் அதிகம் விரும்புகின்றார்கள்! காரணம் என்னவோ?**
**ப:** அன்ரனி, காரணம் ஸ்ரெலிங் பவுண்ஸ், யூறோ, டொலர் அல்லது சுவிஸ் பிராங்காக இருக்கவேண்டும்! மாமாமார்களைப் பார்க்கிலும் பல மாமிமார்கள் ரூபாய்களோடு பழகிக் களைத்துப்போனபடியால் இப்போது பொறின் கறன்சி (foreign currency)யோடு பழகத்தொடங்கி இருக்கிறார்கள்! அதனால் தான், வெளிநாட்டு மாப்பிள்ளைகளை விரும்புகிறார்கள் போலும்! இது தொடர்பான சம்பவம் ஒன்று: நம் பிரதேசத்தில் வாழும் யுவதியொருவரை அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் காதலித்திருக்கிறார். ஆனால், அப்பெண்ணுக்கோ வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்க்கப்படுகிறது! இந்நிலையில் அப்பெண்மணியின் குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் காதலன் அலைபேசியில் உரையாடுகிறான். காதலன், "அதுசரி, மாப்பிள்ள என்ன செய்கிறார்?" எனக் கேட்கிறான். அவரோ, "வெளிநாட்டில்!..." எனக்கூறிவிட்டு, "அதுசரி, நீ என்ன செய்யிறாய்?" என வினவுகிறார். அவனோ, 'நான் கல்முனை!' என்கிறான். மீண்டும் அப்பெண்ணின் குடும்ப உறுப்பினன், "ஓய், என்ன வேலை எண்டு கேக்க, ஊரைச் சொல்லுறாய்!" எனக் கோபப்படுகிறார். நம்மவனோ, 'வெளிநாடு எண்டா மட்டும் வேலையாக்கும்!' என்று ஒரு போடுபோடுகிறான்! 'வெளிநாட்டு மாப்பிள்ளை' என்று ஒருவரின் குணநலன்கள், பழக்கவழக்கங்கள் எவையென ஆராயாமல் திருமணமான பல இளம் பெண்கள் இன்று பெரும் சோகத்தில் இருப்பது பலரும் அறிந்திராத விடயம்! ஆகவே, வெளிநாட்டு மாப்பிள்ளை விடயத்தில் உள்நாட்டு மாமிமார் கொஞ்சம் விவேகமாக இருப்பது தங்களுடைய இளம் பெண்பிள்ளைகளின் வாழ்க்கை சீரழியாமல் இருக்க வாய்ப்பளிக்கும்!

*(நிசா, கிளிநொச்சி)*
**கே: சிலருக்குப் பணம் வந்துவிட்டால் பம்பரம்போல் ஆடுகின்றார்களே! அவர்களை என்ன செய்யலாம்?**
**ப:** நிசா, அப்படி ஆடுபவர்கள், ஆட்டம் முடிய சரிந்து மல்லாக்கவிழாமல் பார்த்துக் கொண்டால் சரி! அண்மையில், அழகான சிந்தனையைத் தூண்டும் சில வரிகளைப் படித்தேன். அதில் ஒன்று, 'வறுமை வந்தால் வாடக்கூடாது, வசதி வந்தால் ஆடக்கூடாது!' என்பதாகும். வசதிகள் கடந்துபோக, வந்த பணம் முடிந்துபோக வழிக்கு வந்துவிடுவார்கள்!

*(றெஜி குருஸ், பலர்மோ, இத்தாலி)*
**கே: புலம்பெயர் வாழ் தமிழ்மக்கள் ஏன் 18 வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள்?**
**ப:** றெஜி, பதினெட்டு வயது என்பது ஒருவர் சிறுவர் பராயத்திலிருந்து பெரியவராகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள்கூட பதினெட்டு வயதைத்தான் ஒருவர் ஆளாகும் பருவமாகக் கணிக்கிறது! உதாரணமாக, சாரதி அனுமதிப்பத்திரம், தனியான வங்கிச் செயற்பாட்டிற்கான அனுமதி, திருமணம் செய்வதற்கான அனுமதி என இது தொடர்கிறது. ஆகவே, ஒன்று, பதினெட்டாவது அகவையின்போது எடுக்கப்படும் கொண்டாட்டத்தின் ஊடாக, இனியும் குறிப்பிட்ட நபர் சின்னப்பிள்ளையோ-சிறுபிள்ளையோ இல்லை என்பதை வெளிப்படையாகச் சொல்வதற்கான சந்தர்ப்பமாக இருக்கலாம்! இரண்டாவது காரணம், பொதுவாகப் பதினாறு வயதின்பின் படிப்புகளுக்கு இடையில் சிறு உழைப்புக்கள் நடைபெறுவதால் காசு கையிலிருக்கும். அதனால், கொண்டாடுகிறார்கள் எனவும் கொள்ளலாம்!

(ரவி, யாழ்ப்பாணம்)
**கே: இன்றைய சமூகம் மிகவும் எதிர்மறையான பாதையில் பயணித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு எனக்குள் ஏற்படுகின்றது! அதிலும் குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தினுடைய போக்கும் அப்படித்தான் என நான் நினைக்கின்றேன். நீங்கள்?**
**ப:** ரவி, 'பெண்ணின் முதல்மாதவிடாயைத் திருவிழாவாகக் கொண்டாடும் இந்தச் சமூகம், அடுத்தடுத்த மாதவிடாயைத் தீட்டாகப் பார்க்கிறது!' என்ற வாசகத்தினை அண்மையில் படிக்கநேர்ந்தது! நம்முடைய சில பழக்கவழக்கங்களை அல்லது பண்பாட்டுக் கூறுகளை மாற்றுச் சிந்தனைக்கு உட்படுத்தவேண்டும் என்பதை மேற்சொன்ன விடயம் உச்சந்தலையில் ஓங்கி அடித்து உறைக்க வைத்திருக்கிறது! ஆனால், நம் வாழ்வியலோடு இணைத்துக்கொண்ட சில மூடத்தனமான - முட்டாள்தனமான அம்சங்களை எப்படி உறைக்கச் சொன்னாலும் அவை நம்மவர்களின் புத்தியில் ஏறுவதாகத் தெரியவில்லை!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(காந்தன், கொழும்பு)*
**கே: மற்றவர்கள் தங்களுக்கு நிறையச் செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களின் எதிர்பார்ப்புக்களை எப்படி நிறைவேற்றமுடியும்?**
**ப:** காந்தன், 'மற்றவர்கள் உங்களுக்கு எதைச் செய்யவேண்டுமென விரும்புகின்றீர்களோ அவற்றையெல்லாம் அவர்களுக்கு நீங்கள் செய்யுங்கள்' என்பது இயேசுவின் அழகான, ஆழமான ஒரு போதனை. கடைப்பிடியுங்கள், உங்கள் வாழ்வு சிறக்கும்.

*(எழில், யாழ்ப்பாணம்)*
**கே: தனியார் நிறுவனமோ, அரச திணைக்களமோ எதை எடுத்துக்கொண்டாலும் முகஸ்துதி பார்ப்பது, அதிகாரிகளின் புகழ்பாடுவது போன்றவைதான் நடக்கின்றது. உண்மையைச் சொல்ல, உள்ளதை உள்ளவாறு கூற, விமர்சிக்க ஆள்கள் இல்லையா?**
**ப:** எழில், எல்லா இடங்களிலும் ஏறக்குறைய இதுதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. கீழுள்ள அதிகாரிகள்(பணியாளர்கள்) தமக்கு மேலுள்ளவர்களைப் புகழ்வதும் போற்றுவதும் முகஸ்துதி பாடுவதும் தான் நடக்கின்றது! அண்மையில், ஒரு பத்திரிகைவெளியீட்டகத்தினர்ஒருவிழாவை நடத்தியிருக்கிறார்கள். அந்நிகழ்வில் பேச அழைக்கப்பட்ட ஒரு பணியாளர் அந்நிறுவனத்தின் மீதுள்ள விமர்சனங்களைக் கொஞ்சமும் தொட்டுக்காட்டாமல் அந்நிறுவனத்தைப்பற்றிப் புழுகுபுழுகு என்று புழுகித்தள்ளினார் என அவரின் உரையைக்கேட்ட ஒருவர் ஆதங்கத்தோடு குறிப்பிட்டார். இருப்பதைப் புகழ்ந்தால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லாததை இருப்பதுபோலப் புகழ்ந்தால் எவ்வாறு பொறுப்பது? எங்ஙனம் சகிப்பது!?

(காந்தன், கொழும்பு)
**கே: வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லையே! மாறிமாறி ஏதோ ஒரு பிரச்சினை வந்த வண்ணமாகத்தானே இருக்கின்றது!?**
**ப:** அவை(அன்றாடப் பிரச்சினைகள்) தீராது! தீரவும் மாட்டாது! தீர்க்கவும் மாட்டார்கள்! அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்தால் அரசியல் தீர்வு குறித்துப் பேசத் தொடங்குவீர்கள்! ஆகவே, 'கிறீஸ் மனிதன்' பிரச்சனையோடு தொடங்கி, வாள்வெட்டில் வந்து, இப்போது மணல் அகழ்வில் நிற்கிறது! ஆனால், சங்கிலித் தொடராக இதே பிரச்சினைகள் அல்லது இவைபோன்ற பிரச்சினைகள் தொடரத்தான் போகின்றன! காரணம், மேற்சொன்னது! (இப்பதிலின் மேலுள்ள முதல் மூன்று வியங்கோள் குறிகளோடுள்ள வாக்கியங்களை மீண்டும் படிக்கவும்!... இப்போது புரிகிறதா புதிர்?

*(பிரதீபன், யாழ்ப்பாணம்)*
**கே: மணல் அகழ்தல் பெரும் பிரச்சினையாக மாறி வருகின்றது. இதனைத் தடுக்க என்ன செய்யலாம்?**
**ப:** மண்ணாப் போயிருவாங்கள் (இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதற்காக மன்னிக்கவும்! ஆனால், உண்மையும் அது தான்!) மண்ணையள்ளி எங்கள் மண்ணை மண்ணாக்கிறாங்கள்! கடத்தல், கொள்ளை போன்றவற்றைச் செய்யும் "மாபியாகள்' உண்டு. இவ்வரிசையில்தான் 'மண்கடத்தும் மாபியாக்கள்'யும் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனைச் சட்டங்கள் ஓரளவிற்குத்தான் தடுக்கும்! தடை செய்யும்! ஆனால், மக்கள் விழிப்பாக இருந்தால் இத்தீமைகளை விரட்டலாம், வீழ்த்தலாம்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsappக்கோ அனுப்பி வைக்கலாம்.**

## குழந்தை இயேசுவைத்தேடி மூன்று ஞானிகளின் வருகை

இறைமகன் பிறந்தார் என்னும் - இனிய செய்தி பரப்புவதற்கு
இறைவதன வானவர்கள் - நெடுந்தூரம் விரைந்து சென்று
பிற இன மாந்தருக்கும் - பேரருள் கொடுக்க வேண்டி
நெறிப்பட உரைப்பதற்கே - இறை திட்டம் அருளப்படுகிறது

மறைவளம் மனவளங்கள் - மாண்புள்ள மதவளங்கள்
அறிவியல் தரும் வளங்கள் - அழகுவான் இயல் வனங்கள்
இறைவரம் யாவும் பெற்ற - ஈடில்லா அறிஞர் மூவர்
நிறைவளம் பெற்றிருந்த - நிலைமையில் வாழ்ந்திருந்தார்

பாரசீகம் சாபாவில் - பாலைமண் அரேபியாவில்
சீருடன் வாழ்ந்த இந்தச் - சிறப்புறும் அறிஞர் முன்வான்
தேரினில் விண்மீனைப்போல் - நின்றறிவித்த செய்தி
ஆர்வமாய்க் கேட்டவர்கள் - அகத்தினால் வியந்தெழுந்தார்

விண்மீன் தான் வழியைக் காட்ட - விரைந்த அம் மூன்று பேரும்
கண்முன்னே சந்தித்து - இறைதிட்டத்தை உய்த்துணர்ந்தார்
மண்மீதில் இறைமைந்தர் தோன்றி - மக்களை மீட்டார் என்னும்
எண்ணத்தில் மிதந்து கொண்டே - எருசலேம் வந்து சேர்ந்தார்

உறுபுகழ் யூதர் தங்கள் - உயர் மன்னர் பிறந்துள்ளாரே
அருவானில் விண்மீன் தோன்றி அறிவிக்க விரைந்தோம் என்றே
எருசலேம் நகர்தனை ஆண்ட - ஏரோது மன்னவன் முன்னே
விரும்புகண் அறிஞர் மூவரும் - விளம்பினார் ஆர்வத்தோடே

அது கேட்டு ஏரோது மன்னன் - தம் அரசிற்குப் போட்டியா என்று
உதட்டினை மென்று கண்ணில் - உறுசினம் சிவக்க, இந்தப்
புதுப்பகை தோன்றாவாறு - பொசுக்குதல் தன் கடமை என்றே
அதட்டிய நாவன்மையில் - அவன் நல்லவன் போல் நடித்தான்

நேர்முன்னே பார்த்த மண்ணில் - நெருங்கியே நின்ற மூன்று
பேர்களும் தங்கள் தங்கள் - பேரூர்களுக்கு மீளும் போது
சேர் மண்ணுள் பாறைகண்டால் - செல்லும் இடம் மாற்றும் பேர் போல்
சீர்தரும் வேறுபாதை வழியாக - சென்ற தம் நாடு சேர்ந்தார்

அன்ரனிராஜ் இராயப்
ம.ஜேசுநந்தி

## சாத்தியமா?



அகிலமெல்லாம் அன்புமொழி
பேசும் போது
மாந்தரெல்லாம் அறத்தின் வழி
நடக்கும் போது
வாய்மையையே வேதமென்று
உரைக்கும் போது
தூய்மையே அகத்தில் இருக்கும் போது
கல்விநெறி கடைத்தெருவில் மலியும் போது
சேரியிலும் புத்தகங்கள் கிடைக்கும் போது
பஞ்சமின்றி வயல் நிலங்கள் விளையும் போது
இல்லையென்ற சொல்லழிந்து போகும் போது
மனித இனப் பிரிவினைகள் ஒழியும் போது
அனைத்துயிர்க்கும் சமதர்மம் நிலவும் போது
அவதரிக்கும் வரம் தாரும் தேவனே
இல்லையேல் பிறவாமல் சாபமிடும் ஈசனே!

**நன்றி: கரைதொடாத அலைகள்**

## உழவர்கள் வாழ்க!

"ஓயாமல் சுழலும் உலகம் தானும் உழவர் பின்னே சுற்றும்" என்றார் புலவர். உணவும் உயிரும் கொடுக்கும் உழவினை உள்ளம் மகிழப் போற்றிடுவோம். பசுவிற்கும், ஏருக்கும், ஊருக்கும் உற்சாகக் கொண்டாட்டம். அறுவடைத் திருநாளின் ஆனந்தக் கொண்டாட்டம். இந்நாளில் நல்ல நிலத்தில் விழுந்த நல்ல விதைதான் மிகுந்த பலன் கொடுக்கும் என நாதன் இயேசு உரைத்த வாக்குப்படி நாமும் நல்ல விதையாவோம். மிகுந்த பலன் கொடுப்போம். மண்ணில் புதைத்தவை இன்று செந்நெல்லாய், செங்கரும்பாய் விளைந்தது கண்டு மகிழ்ந்து நிற்கும் மனிதன், விளைச்சலைத் தந்த இறைவனுக்கும், அவர் படைத்தளித்த இயற்கைக்கும் நன்றி கூறி பொங்கும் மகிழ்ச்சியில் திளைக்கட்டும். தமிழருக்குத் தைத்திங்கள் தனித்துவம் மிகுந்த பெருந் திருநாள். இந்நன்னாளில் உணவூட்டும் உழவர்களை உளமார வாழ்த்துவோம். அவர் களுக்கு உழைப்புக்கேற்ற பலன் கிடைக்க இறைவனை வேண்டுவோம். நேசக்கரம் நீட்டுவோம்.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

அருட்பணி S.V.B. மங்களராஜா

### யாழ் திருத்தூது மாவட்டத்தின் சொத்துக்களும், வரும்படியும்

இந்தப்பணம் வழமையாக ஒரு பங்கிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரினால் சேகரிக்கப்பட்டு ஆலய கருவூலத்தில் வைக்கப்படும். இவ்வாறு சேர்க்கப்படும் பணம் பங்கின் செல்வாக்குள்ளவர்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் பங்குச் சபையினால் நிர்வகிக்கப்படும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆலயத்தின் அலுவலர்கள் (கட்டளைக்காரர்) என்று அழைக்கப்படுவர். அவர்களின் முக்கியத்துவத்திற்கேற்ப அவர்களுள் ஒருவர் 'மூப்பர்' என்று அழைக்கப்படுவர். சிலவேளைகளில் 'மூப்பர்கள்' இருப்பர். சிங்களவர் மத்தியில் இவர்கள் 'அண்ணாவி' என்று அழைக்கப்படுவர். 'திருப்பொருள் அறைப் பொறுப்பாளர்' 'சங்கிடுத்தாம்' ஒருவர் இருப்பார். செயலர் அல்லது கணக்கு வழக்குகளைப் பேணுபவர். ஒருவர் (கணக்குப்பிள்ளை ) அல்லது பலர் இருப்பர். அவ்வாறாக ஆலய சபையில் 5,7 அல்லது 8 பேர் உறுப்பினராயிருப்பர். அருட்பணியாளர் இருந்தால் அவருக்கும் சபையில் இருக்க உரிமையுண்டு. ஆயினும் அவர் ஏதேச்சாதிகாரமாகத் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாது.

ஆலயத்தின் (பங்கின்) வரும்படி நல்ல விதமாக நிர்வாகிக்கப்படவேண்டுமென்ற புரிந்துணர்வு இருந்தாலும் அடிக்கடி இந்நியதி கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. செல்வாக்குள்ள ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தமது எண்ணத்தை மற்றையோர் மீது திணித்து பணத்தை விரும்பியவாறு செலவழிப்பது. தேவையற்ற விடயங்களில் செலவழிப்பது. அல்லது தத்தமது சொந்தத்தேவைகளுக்காகப் பயன்படுத்துவது போன்ற செயற்பாடுகளும் இடம்பெறுவது வழக்கம். ஒரு அருட்பணியாளர் ஒரு ஆலயத்திற்கு வரும்போது அவர் செய்யும் முதற்பணிகளிலொன்று கணக்குவழக்குகள், வரவு செலவுகள், பற்றுச்சீட்டுக்கள் ஆகியவற்றைச் சரிபார்த்தலாகும். ஆயினும் அருட்பணியாளர் எந்தவித முறைகேடுகளையும் கண்டுபிடிக்க முடியாத வகையில் எல்லாம் தாயார்படுத்தப்பட்டிருப்பதையும், தவறுகளை கண்டுபிடிக்குமளவுக்கு அவர் நீண்ட நாட்கள் அங்கு நிற்காமல் அடுத்த ஆலயத்திற்குச் சென்றுவிடுவதால் சிக்கலான, தவறான விடயங்கள் கண்டுபிடிக்கப்படுவதில்லை. இவ்வாறான செயற்பாடுகளால் படிப்படியாகக்கணிசமான பங்குகளில் பல்வேறு தூண்டுதல்கள் வழியாக ஆலயப்பணத்தை பங்குத்தந்தை தமது கைவசம் வைத்திருப்பதால் அவருடைய அனுமதியினறிச் செலவுகள் செய்ய முடியாது என்ற முறைஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் திருத்தூது மாவட்ட முதல்வர் முக்கியமாகச் செய்து முடிக்க வேண்டிய பணிகளுள் ஒன்று ஆலயங்களின் நிதிநிர்வாகத்தை ஒரு கட்டமைவுக்குள் கொண்டுவருவதாகும். அவர் ஏற்கனவே கணக்கு வழக்குகளைச் சமர்பிக்காத சில (பங்கு) சபைகளுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இவ்வாறாக திரு அவைத்தலைவர்களின் நடவடிக்கைகளை வரவேற்கின்றனர். எனினும் நாட்செல்லச் செல்ல மக்களின் ஆன்மீகம் முதிர்ச்சியடைய, அவர்களின் ஒழுங்கு நேர்மைத்தனம் ஆகியவற்றில் இன்னும் வளர்ச்சியடைய திருத்தூது மாவட்ட முதல்வர் நிர்ணயிக்கும் குறிக்கோளை அவர்கள் அடைவார்கள் என்று அவர் நம்புகின்றார்.

இன்னுமொரு விடயத்தில் என்ன முடிவு எடுப்பது என்று ஆயர் செமேரியா ஆண்டகை நன்கு சிந்திக்க வேண்டியிருந்தது. அது என்னவெனில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட 1/10 பகுதி கொடுப்பனவை வேண்டுமென்றே கொடுக்க மறுப்பவர்களுக்கு அருளடையாளங்களையும் (திருவருட்சாதனங்களை) கொடுக்க மறுக்கலாமா என்பது பற்றியதாகும். முன்னதாக கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களின் நிர்வாகத்தில் இப்படியானவர்களுக்கு திருவருட்சாதனங்களும். கிறிஸ்தவ அடக்கமும் மறுக்கப்பட்டு வந்தமை ஆயர் செமேரியாவிற்குத் தெரிந்திருந்தது. அத்துடன் தெற்கு (கொழும்பு) திருத்தூது மாவட்டம் இன்னமும் ஒரு கோவா ஒரட்டோரியன் திருத்தூது முதல்வரின் அதிகாரத்தில் இருந்து வந்த நிலையில் அங்கு தொடர்ந்து அருளடையாளங்கள் கிறிஸ்தவ அடக்கம் மறுக்கப்படும் நிலையே இருந்து வந்தது. எது எப்படியிருப்பினும் ஆயர் செமேரியா அவர்கள் திருவருட்சாதனங்களை அல்லது கிறிஸ்தவ அடக்கத்தை மறுப்பது கடினமானதொரு தண்டனையென்றும் வேறு ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அத்துடன் இவ்விடயம் பற்றி இன்னும் நன்கு ஆராய வேண்டுமென்றும் ரோமை நற்செய்தி அறிவிப்பு பேராயத்திடம் ஆலோசனை கேட்க வேண்டுமென்றும் எண்ணினார்.

ஆலய வரும்படிகள் ஒழுங்கமைக்கப்படுவது பற்றிக்குறிப்பிடும் போது வன்னியிலுள்ள மடு மாதா ஆலயம் பற்றியும் குறிப்பிட வேண்டும். வன்னிக் காட்டின் நடுவே களிமண்ணால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட ஒரு சிற்றாலயம் மடு மாதா என்ற பெயரில் உள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் இங்கு அருட்பணியாற்றிய ஒரு கோவா ஒரட்டோரியன் சபைக்குரு இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று ஒரு பாரம்பரியம் உண்டு. அங்குள்ளவர்கள் இவரைச் 'சம்மனசுச் சுவாமி' என்று குறிப்பிட்டு வந்தார்கள். கோவாவில் பீடத்திற்கருகில் இவரது கல்லறை உள்ளதாகவும் இக்கல்லறையிலிருந்து எடுக்கப்படும் மண் பாம்பு மற்றும் விஷ ஜந்துக்களின் கடிக்கு மருந்தாகப் பயன்பட்டு வந்தது. இங்கு பணியாற்றிய மறைபணியாளர், கிறிஸ்தவர்கள் , இஸ்லாமியர், மற்றும் கிறிஸ்தவரல்லாதோர் எல்லோரும் மேல் குறிப்பிட்டவற்றுக்குச் சான்று பகர்வர். ஆயர் செமேரியாவிடம் நேரடியாகச் சில கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவரல்லாதோரும் தாம் 'புதுமைகள்' இடம் பெறுவதை நேரில் கண்டதாகக் கூறியுள்ளனர். இந்த மண்ணுள் சில அசாதாரண குணப்படுத்தும் தன்மை உள்ளமை இந்த மண்ணில் இயற்கையிலேயே காணப்படும் விசேட குணமா அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட இறைவல்லமையா என்ற கேள்வி எழுகிறது. ஆயினும் இக்கல்லறையிலுள்ள மண் முடிந்தபின் வேறு ஒரு இடத்திலிருந்து கொண்டுவந்து கொட்டப்படும் மண்ணுக்கும் இந்தக் குணப்படுத்தும் வல்லமையுள்ளமை இந்த மண்ணிற்கு இயற்கையிலேயே ஒரு குணப்படுத்தும் வல்லமையுள்ளது என்ற கருத்தை ஏற்க முடியாததாக்குகின்றது. எது எப்படியிருந்தாலும் இவ்விடம் பல திருயாத்திரைகள் மேற்கொள்ளும் இடமாகவும், பலவிதமான காணிக்கைகள் வந்து சேரும் இடமாகவும் இருந்த வருகின்றது. ஆனால் இந்த ஆலயம் முற்றுமுழுதாக அருகிலுள்ள கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமாகவிருப்பதால் இங்கு சேரும் காணிக்கைகள் ஒன்றில் கையாடலுக்குள்ளாகின்றன. அல்லது அங்குமிங்குமாக சிதறிவிடுகின்றன. இதனால் ஆலயத்திற்கோ, மறைத்தளத்திற்கோ, திருத்தூது மாவட்டத்திற்கோ எவ்வித இலாபமும் இல்லை. இந்த ஊழல் நிறுத்தப்பட வேண்டும். இந்த ஆலயத்தின் மண்ணின் தன்மை நன்கு கவனமாக ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும். இம் மண்ணின் தன்மை பற்றி சரியான விளக்கம் எட்டப்பட வேண்டும். இது வெறும் மூட நம்பிக்கையெனக் கண்டறியப்பட்டால் இவ்விடத்திற்கான திருயாத்திரைகள் மற்றும் இம்மண்ணைப்பாவிப்பது எல்லாம் நிறுத்தப்படும். இங்கு எவ்வித மூட நம்பிக்கைக்கும் இடமில்லை என்று கண்டறியப்பட்டால் இவ்விடத்திற்கான யாத்திரைகள், இம்மண்ணின் பாவனை போன்ற விடயங்கள் சரியாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

(தொடரும்...)

# நற்செய்தி அறிவிப்பும் கிறிஸ்தவக் கல்வியும்



திரு.எம்.ஜோண் டோமினிக்

"இன்று நான் உனக்குக் கட்டளையிடும்- இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும் போதும். நீ படுக்கும் போதும். எழும் போதும் உன் வழிப் பயணத்தின் போதும். அவற்றைப் பற்றி பேசு" (இச 6:6) என்று பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் தான் எகிப்திலிருந்து தேர்ந்தெடுத்த மக்களுக்கு. பாலை நிலப் பயணத்தில் கொடுத்த சட்டங்களை. தங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டிய பொறுப்பைப் பெற்றோருக்குக் கொடுத்தார் ஆண்ட வரே கடவுள் எனவும். அவரே உண்மையான இறைவன் எனவும் அறிந்துகொள்ளுங்கள் (இச 7:9) என்று அறைகூவல் விடுத்தார்.

இஸ்ரயேல் தங்களை ஆட்சி செய்ய அரசரை ஏற்படுத்தும் போது. அரசன் சட்ட நூலின் நகல் ஒன்றைத் தனக்கென ஒரு ஏட்டில் எழுதித் தன்னோடு வைத்துக் கொண்டு. அதை நாள் தோறும் வாழ் நாள் முழுவதும் வாசித்து. எல்லா வார்த்தைகளையும் நிறைவேற்றுவதன் மூலம். கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நடக்கக் கற்றுக்கொள்வான் (இச 17:18-19). திருச்சட்ட நூலை நாள் தோறும் கற்றால் தான் அரசன் நெறிபிறழாது மக்களை ஆள முடியும்

திரு நூல் வல்லுநரான எஸ்ரா காலை முதல் நண்பகல் வரை ஆடவரையும் பெண்டிரையும். புரிந்து கொள்ளும் ஆற்றலுள்ள சிறுவரையும் பார்த்து. திருநூலை உரக்க வாசித்த போது எல்லா மக்களும் திரு நூலுக்கு செவிகொடுத்தனர். வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்துகொண்டனர். மனமாற்றத்தின் விளைவாகத் திருச்சட்டத்தின் சொற்களைக் கேட்டதிலிருந்து அழுது கொண்டிருந்தனர் (நெகே 8:3. 8. 9). திருச்சட்டத்தைப் பற்றிய அறிவு மக்களின் மனமாற்றத்திற்கு வழிவகுத்தது.

நான் சொல்வதை நினைவில் வை. என் கட்டளைகளை மறவாதே. நீ வாழ்வடைவாய் (நீமொ 4:4). பிள்ளாய் கவனி. நான் சொல்வதை ஏற்றுக்கொள் அப்பொழுது உன் ஆயுட்காலம் நீடிக்குப் (நீமொ 4:10). உன் உள்ளத்தில் என் வார்த்தைகளைப் பதித்து வை. அவற்ஸ தேடிப் பெறுவோருக்கு அவை உயிரளிகும். அவர்களுக்கு உடல்நலமும் தரும் (நீமொ 4:21, 22) என்ற இறை கட்டளைகளைக் கடைபிடிப்பதால் வரும் பயன்களைத் தந்தை தன் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

இஸ்ரயேல் மீது ஆண்டவர் கொண்ட அன்பினால் உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர் தாமே கற்றுத் தருவார். உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்றுச் சிறப்புறுவர் (எசா 54:13) என்று வாக்களித்திருந்தாலும். ஆண்டவரைப் பற்றிய அறிவை பிள்ளைகளுக்கு இள வயதில் ஊட்ட வேண்டிய முக்கிய கடமை பெற்றோருக்கு உண்டு.

- ஆண்டவர் எசேக்கியேலுக்குக் கொடுத்த சுருளேட்டை தின்று வயிற்றை நிரப்பிய பின். இஸ்ரயேல் வீட்டாரிடம் போய். அவரது சொற்களை அவர்களுக்கு எடுத்துக்கூற (எசே 3:3-4) அழைப்பு விடுக்கிறார். இஸ்ரயேல் வீட்டாருக்கு காவலனாக நியமித்துள்ளேன். என் வாயின் சொற்களைக் கேட்டு அவர்களை என் பெயரால் எச்சரிக்கை செய் (எசே 3:17) என்றுகூறி எசேக்கியேலை இறைவாக்குப் பணிக்கு அனுப்புகிறார்.

இயேசுவும் திருமுழுக்கு யோவானும் சிறுவயதிலிருந்தே பெற்றோர்களால் தவறாமல் தொழுகைக் கூடத்திற்கும், எருசலேம் ஆலயத்திற்கும் அழைத்துச்செல்லப் பட்டதால். இஸ்ரயேலின் கடவுளைப் பற்றிய அறிவால் நிறைந்திருந்தார்கள். எருசலேம் ஆலயத்தில் இயேசு போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார் (லூக் 246). திருமுழுக்கு யோவானும் உன்னத கடவுளின் இறைவாக்கினராக, பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து. ஆண்டவருக்கான வழியை செம்மைப்படுத்தினார் (லூக் 1:76-77). ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர். வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை. அமைதியின் அரசர் (எசா 9:6). ஆண்டவரின் ஆவி அவர் மேல் தங்கியிருக்கும். ஞானம். மெய்யுணர்வு. அறிவுரைத்திறன். ஆற்றல், நுண்மதி. ஆண்டவரைப் பற்றிய அச்ச உணர்வு இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும் (எசா 11:2). இது போன்ற இறைவாக்குகளை இயேசுக்கிறிஸ்து வாசித்த போதும். கேட்ட போதும் இவை தன்னில் நிறைவேறப் போவதை நிச்சயமாக உணர்ந்திருப்பார்.

இயேசுக்கிறிஸ்து தந்தையோடு கொண் டிருந்த நெருக்கமான உறவின் காரணமாக தந்தை கற்றுக்கொடுத்தவற்றை மட்டுமே சீடர்களுக்குக் கற்பித்தார். எனவே சீடர்களிடம். நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல. அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை (யோ 14:24) என்றும். என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன் (யோ 15:15) என்றும் கூறினார்.

நற்செய்தி அறிவிப்பவர்கள் இருந்தால் தான். ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடி மீட்புப் பெறுபவர்கள் இருப்பர். கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி அறிவிக்கப்பட்டால்தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு (உரோ 10:13.17). மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு. இயேசு கிறிஸ்துமீது நம்பிக்கை கொண்டு வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டவர்கள் துணிச்சலோடு நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபடுவோம். கிறிஸ்தவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட கிறிஸ்தவக் கல்வியால், நற்செய்திப் பணிக்கு மிகச் சிறந்த சான்றுகளாகத் திகழ்வார்கள்.

# பொங்கலோ பொங்கல்

### எனது வாழ்த்து

பொங்கலோ பொங்கல். காவலன் வாசகர்களுக்கும், உலகளாவி வாழும் அனைத்துத் தமிழர்களுக்கும் காவலன் வாயிலாக எனது பொங்கல் வாழ்த்துக் களைக் கூறுகின்றேன்.

சில சொற்களில் ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. அக்கவர்ச்சியில் ஒரு மலர்ச்சி உண்டு. அம் மலர்ச்சியில் மகிழ்ச் சியும் உண்டு. 'பொங்கள்'என்ற சொல் லைச் சொல்லும்பொழுது அந்தக் கவர்ச்சி யும், மலர்ச்சியும், மகிழ்ச்சியும் பொங்கி வழிகின்றனவல்லவா?

ஒரு காலத்தில் கமம் செய்து வாழ்ந்த தமிழ் மக்கள், பொங்கல் தினத் தன்று ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது, 'என்ன உங்கள் வீட்டில் இன்று பால் பொங்கிற்றா?' என்று கேட்டுப் பொங் கல் வாழ்த்தைப் பரிமாறுவார்களாம். தமி ழர் பண்பாட்டில் தோன்றிய பல விடயாங் கள் காலத்தினூடாக இறந்து விட்டன. அதுவும், ஈழத்து முப்பது வருடப் போரின் பின்னர் இன்னமும் பல நல்ல தமிழர் பண்புகள் செத்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இவ்வரு டம் பொங்கல் விழாவைக் கொண்டாடு கின்றோம்.

### நன்றி விழா

பொங்கல் விழா ஒரு நன்றி கூறும் விழா. 'செய்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை'என்பதை நன்குணர்ந்த தமிழர், பொங்கல் விழாவில் நன்றி கூறி மகிழ்கிறார்கள்.

ஒரு காலத்தில் சொந்த வயலில் உழுது, நெல்விதைத்து, பருவ மழையால் செழித்தோங்கி வளர்ந்த நெற்பயிரை அறுவடை செய்து சூடடித்து, நெல்லை அரிசியாக்கி 'ஊர் அரிசி' என்றழைத்து உண்டு மகிழ்ந்தார்கள், உழவர். உழவர் சூரியனை நம்பி, கார்மேகங்களை எதிர் பார்த்து அளவான மழையில் பயிர் வளர்த்து பெருமிதம் கொண்டார்கள். அவர்கள் சூழலோடு இணைந்து வாழ்ந்தார்கள். அந்தப் பசுமையான நிகழ்வுகளை இன்று எண்ணிப் பார்க்கின்றேன்.

தொழில் நுட்ப வளர்ச்சியில் வளர்ந்த ஓர் இனம் சூழலை மதிப்ப தில்லை. சூழலோடு ஒத்து வாழ்வதில்லை. அது மட்டுமல்ல: சூழலை மாசுபடுத்தி கால நிலைகள் மாறுவதினால் ஏற்படும் ஆரோக்கியமற்ற விழைவுகளை விஞ்ஞானி கள் கண்டறிந்து சூழலைப் பேண மக்களை வலியுறுத்தும் காலமிது.

'மண்டினி ஞாலத்து வாழ் வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் பாடினார். உண்டி கொடுத்தவர், உயிர் கொடுத்தவன் இறைவன். உண்டி பெற்று உயிர்பெற்ற உழவர் நன்றி உணர்வால் உந்தப்பட்டு முதற்கனியை, புத்தரிசியினால் ஆக்கிய முதற் படைப்பை ஆண்டவனுக்கு அர்ப் பணிக்கிறார்கள், உழவர். இது பொங்கல் விழா. நன்றி விழா.

ஆனால், மாடி வீடுகளில் அடை பட்டு வாழ்ந்து பழகிய தமிழர், சுப்பர் மார்க்கெட்டில் (Super Market) பொதி களில்அரிசி வாங்கி, அதை றைஸ் குக்கரில் (Rice Cooker) சோறாக்கி உண்பவர்க ளுக்கு அந்த அரிசி எங்கிருந்து வருகிற தென்பது கூடத்தெரியாது! இவர்கள் அந்த உழவர்களை நினைக்கிறார்களா? அவர்களுக்கு நன்றி கூறுகிறார்களா? இவர்களுக்குப் பொங்கல் விழா ஒரு சொப்பிங் விழா (Shopping) மட்டுமே.

### வரலாற்றுச் சுருக்கம்

மனிதகுல வரலாற்றில் ஒரு கட்டத்தில் மந்தை மேய்த்து நாடோடி யாக அலைந்து திரிந்து, பின்னர் வேளாண்மையை மேற்கொண்டு ஒவ் வோர் இடத்திலும் நிலையாக வாழத் தொடங்கினார்கள் மக்கள். இவ்வகையான வாழ்க்கை முறையை நடத்திய காலத் திலேதான் திராவிட மக்களிடையே பொங் கல் விழாக் கொண்டாடும் வழக்கம் ஆரம் பித்திருக்கவேண்டும். ஆகவே பொங்கல் விழா திராவிடர் விழா என்று கூறின் மிகையாகாது.

### சூரிய வணக்கம்

பொங்கல், பயிர் விளைச்ச லுக்குக் காரணமாக இருந்த சூரியனுக்கு நன்றி சொல்லும் நாளாகப் பொங்கல் விழா மாறியது. அந்தக் காலத்து மக்க ளுக்கு சூரியன்தான் மாபெரும் சக்தியின் பிறப்பிடமாக விளங்கியது. ஒளியும்,





வெப்பமும், பிறவும் சூரியனில் இருந்து தான் எமக்குக் கிடைக்கின்றது என்று அன்றைய திராவிடர் எண்ணினார்கள். அதனாலேயே சூரியன் பொங்கலுடன் இணைந்தது. சூரிய நமஸ்காரம் இன்றும் தொடர்கின்றது. இந்நிலையில் ஏனைய பல விழாக்களைப் போல பொங்கல் விழாவும் சமயத்துடன் சம்பந்தப்பட ஆரம்பித்தது. பொங்கலுக்கு அடுத்த நாள் 'மாட்டுப் பொங்கல்'என்று அழைக்கப்படுகின்றது. மாடு உழவர்களுக்கு அவசிய உதவியைப் பல்வகையில் செய்தது. செய்ய வைத் தார்கள். அப்படிப்பட்ட மாட்டை மதிக் கும் நாளாக 'மாட்டுப் பொங்கல்' உரு வாகியது.

**கரவையூர் செல்வம்**

### ஐரோப்பிய கத்தோலிக்கம்

கத்தோலிக்க மதம், இயேசுவின் நற்செய்தியை எடுதுரைக்க தமிழ் நாட்டிற் கும் ஈழத்திற்கும் வருகை தந்த பொழுது, பொங்கல் விழாவை இந்து சமயத்தோடு இணைத்துப் பார்த்த காரணத்தினால், அவர்கள் இத்திராவிடர் விழாவை, தமி ழர் விழாவை புறக்கணித்தார்கள். Pagan (புறச்சமய) ஈடுபாடெனக் கருதி கத்தோ லிக்க த்மிழர்களை இந்து மதத் தமிழர்க ளிடமிருந்து பிரித்து விட்டார்கள். இச் செயலில் அறியாமை இல்லாமல் இல்லை. ஆனால், வரலாற்றுப் பின்னணியில் இந்த அறியாமையைப் பார்க்க வேண்டும்.

### கதவுகள் பல திறந்தன

இரண்டாவது வத்திக்கான் சங் கம் கூட்டுவிக்கப்பட்ட காரணமே இப்படிப் பட்ட அறியாமையில் இருந்தும், புறச்சமயச் சடங்குகளில் (pagan Practices) இருந்து விலகி, வேறு சில Pagan Practics கத்தோலிக்க சமயத்தில் வளர்த்து விட்ட அறியாமையில் இருந்தும் நாம் எம்மை விடுவிக்க வேண்டுமென்ற ஆவலில்தான். இரண்டாம் வத்திக்கான் சங்கம் பல மூடப்பட்ட கதவுகளைத் திறந்துவிட்டன.

இதனை உள்வாங்கிய நாம் ஈழநாட்டில் கொட்டாஞ்சேனை புனித லூ சியாஸ் பேராலயத்தில் முதன்முறையாக 1978ம் ஆண்டு திருவழிபாட்டில் பொங் கல் விழாவை இணைத்துக் கொண்டாடி னோம். பெரும்பான்மையாக இருந்த கத்தோலிக்க மக்கள் இந்தப் பேராலயத் தில் சிறுபான்மையினராகவே நடாத்தப் பட்டனர். (இதில் இன்றும் பெரிய மாற் றம் இல்லை) பொங்கல் விழாவைப் பேரா லயத்தில் கொண்டாடியபொழுது தமிழ் கத்தோலிக்க மக்கள் புத்துணர்வு பெற்று வளர்ந்தமையை நான் கவனித்தேன். அதுமட்டுமல்ல, கொட்டாஞ்சேனையில் வாழும் இந்து மக்களும் இதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஒரு பொது விழாவில் இந்த இரண்டு மதங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் ஒன்று கூட ஒரு வாய்ப்பாக இவ்விழா அமைந்தது. ஆனால், அது தொடரவில்லை.

காலப்போக்கில், தமிழ்நாட்டுக் கத்தோலிக்க ஆயர்கள் பொங்கல் விழாவைக் கத்தோலிக்க தமிழ் மக்கள் கொண்டா லாம் என்று அதிகார பூர்வமாக ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, அதற்கென திருவழி பாட்டு நாட் குறிப்பிலும் செபங்களை உரு வாக்கி திரு வழிபாட்டு நூலில் இணைத்து விட்டார்கள். ஆயினும், இன்றும் கத்தோலிக்க தமிழர்களிடையே இவ் விழா பெரிதாகப் பரவ வில்லை. இது மன வருத்தத்திற்குரியது.

### தேய்ந்து வரும் விழா

பொங்கல் விழா தமிழர் விழா. இது ஒரு நன்றி கூறும் விழா.

**"உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் மற்று எல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"**

என்று வள்ளுவன் குறள் யாத்து உழவர்களை உயர்த்தி விட்டான். இவ்வழி நின்று, எமக்கு நித்தமும் சோறுதரும் உழவர்களை நினைத்து, அவர்களுடைய உழைப்பை மதித்து, அவர்களுடன் இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுவோம். நன்றி கூறி வாழும் வாழ்வும், நன்றியாக வாழ்வதும் ஓர் ஆன்மீகம் தான் எப்படி இந்தத் தமிழர் விழா படிப்படியாகத் தேய்ந்து கொண்டு போகின்றதோ, அதேபோல ஈழத்தமிழர்க ளும் படிப்படியாகத் தங்கள் நிலங்களை, விவசாயம் செய்த இடங்களை இழந்து வருகின்றனர்.

ஈழத்தமிழரிடையே பாகுபாடுக ளும், பிரிவினைகளும் வளர்ந்து வருகின் றன. இதை வளர்ப்பவர்கள் தமிழ் அரசி யல்வாதிகளே என்பதில் தமிழ் மக்க ளுக்கு இரு கருத்துக்கள் இல்லை. இந்தப் பலவீனத்தை சிங்கள அரசுகள் பயன் படுத்தி தமிழர்களை ஓரங்கட்ட முனை கிறார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளார்கள். காணுகிறார்கள்.

### பாகுபாடுகளைக் கடந்த விழா

பொங்கல் விழா உண்மையி லேயே தொடக்கத்தில் மத சார்புடையதாக இருக்கவில்லை. பொங்கல் விழா மதங் களையும், சாதிகளையும் கடந்து தமிழர் விழாவாக தமிழர்களை ஒன்று சேர்க்கும் விழாவாக அமைந்தது. இவ்விழா தமிழரி டையே அன்பு பொங்க, கருணை பொங்க, தமிழர்களை ஒன்று சேர அழைக்கும் விழாவாக அமைய வாழ்த்துகிறேன்.

உலகத் தமிழரை ஒன்றி ணைக்க தமிழர் விழாவாகிய பொங்கல் விழா உதவுமா அன்றேல் ஒன்றிணையும் உலகளாவிய தமிழர் பொங்கலைத் தமிழர் விழாவாக மாற்றுவார்களா...?

*இக்கட்டுரையுடன் பிரசுரமாகியிருக்கும் இப்படமானது பொங்கல் விழாவில் எடுக்கப்பட்டதல்ல. எங்கு, எப்போது, ஆயரின் பிரசன்னத்தில் எடுக்கப்பட்டது எ ன்பதை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்...*

## இளையோர் காவியம்...

உன் கன்னத்தில்
புத்தாண்டு மகளின் முத்தம்

தை பிறந்தால் வழி
நீ பிறந்தால் ஒளி

உன் மனசின் அழுக்காடை கிழி
வெள்ளைத் துணி அணி

நீ நெருப்புப் பொறி
தடைகளை எரி

உன் பயத்தைப் புதை
துணிவு மேடையில் முறை

நீ கடவுளை நம்பிப் போ
வெற்றி உனக்கு வா

உன் பயணம் மீட்பு
சாத்தானுக்கு வை ஆப்பு

நீ கண்ணீர்க் கடலில் குதி
ஏழைகளைத் தூக்கு

உன் வாழ்க்கை எரு
உயிர்களை நடு

நீ எடுத்து வைக்கிற அடி
துயருறுவோரின் வாசல் படி

உன் முடிவு விடிவு
அந்தியை கதிரையிலிருந்து இறக்கு

உன் சுயநலத்தைத் தறி
பொது நலத்தை அறி

நீ அன்னை திரேசாவின் விழுது
வரலாறு எழுது

(தொடரும்...)

**உயிரோவியன்**

## திருத்தந்தை பிரான்சிஸ்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

3. இதன்விளைவாக, பொதுக்காலத்தின் மூன்றாவது ஞாயிறை இறைவார்த்தைக் கொண்டாட்டம், அதனைக் கற்றல், மற்றும் அதனை பரப்புதல் ஆகியவற்றிற்கு அர்ப்பணிக்கப்படும் என்று நான் அறிவிக்கிறேன். இவ் இறைவார்த்தை ஞாயிறு, யூத மக்களுடன் எமது உறவைப் பலப்படுத்தவும், கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக மன்றாடவும் ஊக்குவிக்கும் காலமாக இவ்வாண்டின் பொருத்தமான காலமாக அமையும். இது காலப்போக்கில் ஒரு தற்காலிக நிகழ்விலும் மேலானது: இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டம் திருஅவைகளுக்கிடையிலான உரையாடல் பண்பைக் கொண்டுள்ளது. ஏனெனில் இறைவார்த்தை அதனைக் கேட்போருக்கான உண்மையான நிலையானதுமான ஒற்று மைக்கான பாதையைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஞாயிறை மேன்மையான கொண்டாட்டமாக அமைய வெவ்வேறு குழுக்கள் தமக்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பார்கள். இறைவார்த்தையின் நெறிமுறை மதிப்பை இறைமக்களின் கவனத்தை ஒருமுகப்படுத்தும் நோக்கில் திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது, இறைவார்த்தையை கொலு ஏற்றவேண்டியது மிக முக்கியமானதாகும்.

இந்த ஞாயிறில் இறைவார்த்தையின் அறிவிப்பை முதன்மைப்படுத்துவதும் மறையுரையில் அதற்குச் செலுத்த வேண்டிய முறையான மதிப்பை வலியுறுத்துவம் மிக பொருத்தமானது. வழிபாட்டில் இறைவார்த்தை அறிவிப்பின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் நோக்கத்தோடு, ஆயர்கள் வாசகர்களை அல்லது அதற்கு நிகரானவர்களை ஏற்படுத்தும் சடங்கினை நிறைவேற்றலாம்.

இது சம்பந்தமாக, பீடத்துணையாளர்கள் மற்றும் நற்கருணைப் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பது ஏற்கனவே நடைமுறையில் இருப்பது போல, நம்பிக்கையாளருக்கு, இறைவார்த்தையைத் தகுதியான ஏடுத்துரைப் போரைப் பயிற்றுவிப்பது தேவையான பயிற்சி அளிப்பது போன்று காத்திரமான முயற்சிகளை எடுக்கப்பட வேண்டும்.

எங்ஙனம் இறைவார்த்தையை வாசிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளல், அதற்கு மதிப்பளித்தல் அதன் துணையோடு தினமும் செபித்தல் குறிப்பாக 'இறைதியான வாசிப்பின்' (lectio divina) மூலம் செபித்தல் போன்ற வற்றிக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் வகையில் மேய்ப்பர்கள் திருவிவிலியத்தையோ அல்லது அதன் ஒரு நூலையோ முழு இறைமக்களுக்கும் கொடுப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்கலாம்.

(தொடரும்...)

## 'சாதனைத் தமிழன்' விருது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'சாதனைத் தமிழன்-2019'விருது வழங்கல் தொடர்பாக டான் தொலைக்காட்சிக் குழுமம் வெளியிட்ட பிரசுரத்தில் "கலை என்பது மென்மையானது. பன்மையானது. ஒன்மையானது. உண்மையானது, தின்மையானது, வன்மையானது, வாய்மையானது, தூய்மையானது - ஆகவே தெய்வீ கமானது" என்று கூறிய அருட்பணி கலாநிதி மரிய சேவியர் தனது வாழ்வைக் கலைக்காகவே அர்ப்பணித்து அதனைத் தெய்வீக வாழ்வாக்கிக் கொண்டார்.

கலாநிதி அருட்பணி நீ.மரியசே வியர் அடிகளாருக்கு 2019 ஆம் ஆண்டுக்கான 'சாதனைத்தமிழன்'என்றஉயர்விருதைவழங்கிக்கௌரவிப்பதில் டான் குழுமம் பெருமை கொள்கின்றது" என்று தெரிவிக் கப்பட்டிருந்தது.சமய.சமூகப் பிரமுகர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலர் அரங்கினில் சூழ் ந்திருக்க இடம்பெற்ற இவ் விருது வழங்கல் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

## "தர்மபிரபாஷ்வர" விருது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கலைஞர்கள் தேசிய ரீதியாகவும் மறைமாவட்டங்கள் ரீதியாகவும் பல்வேறு துறைகளில் பணியாற்றுபவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். மறைமாவட்டங்கள் ரீதியாக மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுக்கள், தமக்குவழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் இரண்டு கலைஞர்களை இவ்விருது பெறுவதற்காகத் தெரிவுசெய்து அனுப்பியிருந்தார்கள். யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து இருவர் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள். யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் பணியாற்றி வரும் திரு. இசிதோர் மரியதாஸ் ஜெயசீலன் அவர்களும் இரணைப்பாலைப் பங்கைச் சேர்ந்த திருமதி. பிலோமினா யேசுராசா அவர்களும் இவ்வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை பெற்றுக்கொண்டார்கள். சென்றவருடம் ஆரம்பிக்கப்பட்ட இவ்விருது வழங்கும் நிகழ்வு இரண்டாவது தடவையாக இவ்வருடமும் நடாத்தப்பட்டுள்ளதுடன் மறைமாவட்டபங்குகள்ரீதியாகப்பணியாற்றும்கலைஞர்களின்பணியின் பெருமைகளை வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

### விண்ணகப் பிறப்பின் 18 வது ஆண்டு நினைவு தினம்

மண் மகிழ 11 04 1937



விண் மகிழ 03 02 2002

அமரர்
**பத்திநாதர் அருளானந்தம்**

எம்மோடு என்றும் வாழும் இறைவா

எம் அன்புத் தந்தை வழியாக நீர் எமக்குச் செய்த நன்மைத் தனங்களுக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். உமது அளவு கடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு அமைதி அளித்து இன்ப வான் வீட்டில் இடமளித்தருள வேண்டுகின்றோம். ஆமென்

AD 05

புனித லூர்த்துமாதா கோவிலடி
தும்பளை,
பருத்தித்துறை

அன்புடன் நினைவு கூரும்குடும்பத்தினர்

Holy Cross School of Health Science
767/4 Beach Road, Jaffna

Commnunity Rehabilitation Assistant Training (CRA)
Qualification - G.C.E (O/L) English, Tamil, Maths, Science,Social Studies
Duration - 2 Months (Week end Classes)
Closing Date- 30/01/2020

Diploma in Nursing (NVQ Level VI)
Qualification - G.C.E (A/L) Completed
Duration - 3 Years (2 Years Studies, 1 year training with salary)
Closing Date- 15/02/2020

இதற்கான விண்ணப்பங்களை முடிவுத்திகதிக்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ or தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 222 2423 - 0771159391

### பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப் படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறை வேறும். இச் செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குபண்ணவும்)

(AD- 03) ஓர் அடியாள்.

### விண்ணக வாழ்வில் 20வது ஆண்டு நினைவுகளில்

மண் மகிழ 20 07 1957



விண் மகிழ 23 01 2000

அமரர்
**அருட்தந்தை இம்மானுவேல் யோசவ் அருமைநாயகம்**

(முன்னாள் பங்குத் தந்தை யாழ் அடைக்கல அன்னை ஆலயம், முன்னாள் அதிபர் புனித மாட்டீனார் குருமடம் முன்னாள் அதிபர் பாதுகாவலன் அச்சகம், முன்னாள் ஆயரின் செயலாளர்)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

AD 04

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பின்வரும் ஆலயங்களில் 23.01.2020 வியாழன் காலை ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கல் திருப் பலியில் பங்கு கொண்டு அவருக்காகச் செபிக்குமாறு வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| யாழ் மரியன்னை பேராலயம் | காலை 5.30 மணி |
| யாழ் புனித யாகப்பர் ஆலயம் | காலை 5.30 மணி |
| யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயம் | காலை 5.45 மணி |
| யாழ் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் | காலை 5.50 மணி |
| யாழ் அருள் ஆச்சிரம ஆலயம் | காலை 6.00 மணி |

சீவியத்தில் எம்மை நேசித்தீர் மரணத்தில் உம்மை மறவாதிருப்போமாக.

மகேந்திரன் அண்ணா குடும்பம்
தேவிமந்திரி அக்கா குடும்பம்

### விண்ணக வாழ்வின் 14ம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 13 - 06 - 1913



மறைவு 13 - 01 - 2006

**அமரர் மடுத்தீன் அந்தோனிப் பர்னாந்து**

[பொன்னுத்தம்பி]

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் குடியிருக்க வேண்டும்"
(தி.பா.27:4)

அன்பின் பிறப்பிடமாய் பணியின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு ஐயாவே!. நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

5ம் வட்டாரம்
மண்டைதீவு

AD/01

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## கர்நாடகாவில் மிகப்பெரிய இயேசுவின் திருவுருவம்

இந்தியாவில், பெங்களூர் உயர் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான பத்து ஏக்கர் நிலத்தில், ஏறத்தாழ நூறு அடி உயரத்தில், இயேசுவின் திருவுருவத்தை அமைக்கும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருவுருவம் அமைத்து முடிக்கப்படுகையில் இது போலந்து நாட்டில் 2010ம் ஆண்டில் அமைக்கப்பட்ட, 108 அடி உயர கிறிஸ்து அரசர் திருவுருவ அளவைக் கொண்டிருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. போலந்து நாட்டிலுள்ள கிறிஸ்துவின் திருவுருவம், உலகிலே உயரமானது என்றும் நம்பப்படுகின்றது.

இந்தத் திருவுருவம் அமைக்கப்பட்டுவரும் நிலம் குறித்து ஊடகங்களிடம் பேசிய, பெங்களூர் உயர்மறைமாவட்டத்தின் சமூகத் தொடர்பு பணிக்குழுவின் தலைவர் அருட்பணி சிறில் விக்டர் ஜோசப் அவர்கள், Ramanagara மாவட்டத்திலுள்ள, இந்த நிலத்தை, கிறிஸ்தவர்கள் புனித வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை பக்தி முயற்சிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும், அந்நிலத்தில் சிலுவை இருக்கும் இடத்தில் இயேசுவின் திருவுருவத்தை அமைக்க விரும்புகின்றனர் என்றும் கூறினார். அப்பகுதியில், பிரெஞ்ச் மறைப் பணியாளர்கள் பணியைத் தொடங்கிய 1906ம் ஆண்டிலிருந்து கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அருட்பணி சிறில் விக்டர் ஜோசப் அவர்கள் மேலும் கூறினார்.

### நினைவுகளின் நாட்கள்

பிறப்பு 26 12 1922



இறப்பு 10 01 1995

அமரர்
**சந்தியோகுப்பிள்ளை அருளானந்தம்**

என் அருள் உனக்குப் போதும் வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்...

பிறப்பு 06 09 1898



இறப்பு 09 03 1977

அமரர்
**யோனிஸ் மரியாம்பிள்ளை**

காட்டிய அன்பிற்கும்
ஊட்டிய விசுவாசத்திற்கும் நன்றிகள்
உடல்கள் மரணிக்கலாம்,
நினைவுளும் ஆன்மாக்களும்
என்றும் நிலைக்கும்,
ஆண்டவரிடம் எங்களுக்காக
மன்றாடுங்கள்

பிறப்பு 29 11 1932



இறப்பு 27 03 1975

அமரர்
**ஜெயமணி அருளானந்தம்**

பிறப்பு 29 11 1903



இறப்பு 01 10 1979

அமரர்
**எலிசம்மா மரியாம்பிள்ளை**

AD 02

அன்புப் பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்

## முல்லைத்தீவு புனித வின்சென் டீ போல் சபையின் வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்வு



முல்லைத்தீவுப் பங்கில் புனித வின்சென் டீ போல் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 15.12.2019 அன்று தலைவர் சி.உலகநாதன் தலைமையில் புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு முல்லை மறைக்கோட்ட முதல்வரும் புனித இராயப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தையுமான அருட்பணி ஜோர்ச் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது.

இப்பொதுக் கூட்டத்திற்கு யாழ் மத்திய சபை அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்து சபையினரின் செயற்பாடுகளைப் பாராட்டியும், தமது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

## திருப்பாலத்துவசபை தேசிய செயற்குழுக்கூட்டம்



திருப்பாலத்துவசபை தேசிய செயற்குழுக்கூட்டம் தேசிய இயக்குநர் அருட்பணி பசில் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையில் கடந்த 10ம், 11ம் திகதிகளில் குருநாகலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அனைத்து மறைமாவட்ட இயக்குநர்களும் செயற்குழுவினரும் கலந்து 2020ம் ஆண்டுக்குரிய செயற்திட்டங்களைத் திட்டமிட்டதுடன் 2019ம் ஆண்டிற்கான செயற்திட்டங்களையும் மீளாய்வு செய்துகொண்டனர்.

யாழ். மறைமாவட்டத்தின் இயக்குநர் அருட்பணி எஸ்.ஏ.றொஷான் அடிகளாரும் செயற்குழு உறுப்பினர்களாகிய நிக்சன் (உரும்பிராய்), ம.யூஜினி (அல்லைப்பிட்டி), எஸ்.ஒலின்ரீனா (யாழ்.பேராலயம்) ஆகியோர் இச் செயற்குழுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

## சிற்றம்பலம் கார்டினரின் சிலை திறப்பு விழா



செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் ஞாபகார்த்த முற்றமும் அவரின் உருவச்சிலை திறப்பு விழாவும் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

அமரரின் 121 ஆவது அகவை நாள் மற்றும் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நிகழ்வு இடம்பெற்றமை முக்கிய விடயம்.

சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் நம்பிக்கைப் பொறுப்பின் மரபுவளி பாதுகாவலர் சஞ்சீவ் கார்டினர் சிலையைத் திறந்து வைத்தார். அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியானது 1943 ஆம் ஆண்டு செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் முன்னிலையில் அன்றைய புனித சூசையப்பர் மாமுனிவர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி G.J.பாலசுந்தரம் அடிகளாரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் உயரிய தரிசனப் பார்வையுடன் ஆன்மீக, சமூக, கல்விப் பணிகளைத் தாம் இம்மண்ணில் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல இன்றும் இத்தீவின் சமூகங்கள் பயனடையப் பெரும் பங்காற்றியவராவார். இஞ் ஞாபகார்த்த முற்றத்தில் பின்வரும் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டுள்ளன "அச்சுவேலி மக்களாகிய நாம் உவகையோடும் என்றும் மறவா நன்றி உணர்வோடும் எம் மண்ணின் மகனார் செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் அமரர் தம்மை மிகுந்த மதிப்போடு அவர்தம் வாழ்வுக்காய் பணிக்காய் பேருவகையுடன் என்றும் நன்றி பாராட்டுகின்றோம்' என்று அதில் தெரிவிக்க-

## ஒய்வுநிலைக் குருக்களுக்கான புதிய மனை



யாழ்.மறைமாவட்ட ஓய்வுநிலைக் குருக்கள் ஓய்வு பெறுவதற்காக புதியமனை ஒன்று யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் அமைக்கப்பட்டு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

நான்கு அறைகள் கொண்ட இவ் இல்லமானது பிரதான வீதியில் உள்ள "எமில்" இல்ல வளாகத்தில் அமைந்துள்ளது. இக்கட்டடப் பணியானது நிதி முகாமையாளர் அருட்பணி நேசநாயகம் அடிகளாரின் நேரடிக் கண்காணிப்பிலும் அருட்பணி A.J. ஜெயசீலன் அடிகளாரின் மேற்பார்வையிலும் அமையப்பெற்றது. இக்கட்டடத்திற்கான நிதி உதவியினை டாக்டர் அஞ்சலா எட்வேட் அவர்கள் வழங்கியிருந்தார்.

## மீட்புத் திட்டத்தில் இறைவன் முதியோரையே பயன்படுத்தினார்

### சக்கோட்டைப் பங்கின் முதியோர் கௌரவிப்பில் குருமுதல்வர்



சக்கோட்டைப் பங்குத்தந்தை அருட்பணி. கான்ஸ்போவர் அடிகளாரின் முயற்சியால் அப்பங்கைச் சார்ந்த நூற்றுக்கும் அதிகமான முதியவர்களைக் கௌரவிக்கும் ஒரு அழகான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றிய யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி. ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் இறைவன் தனது மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற இனி உலகுக்குப் பயனற்றவர்கள் என்று கருதப்பட்ட முதியோர் பலரைப் பயன்படுத்தினார் என்று சுட்டிக்காட்டினார். திருமுழுக்கு யோவானைத் தந்த சக்கரியா, எலிசபேத், மரியன்னையைப் பெற்றெடுத்த சுவக்கீன், அன்னம்மாள், இயேசுவைக் கையிலேந்தி மீட்பு வந்துவிட்டது என்று அறிவித்த சிமியோன், அன்னா போன்றவர்களை அவர் முன்னுதாரணம் காட்டினார்.

இவ்வாறு இன்று நம்மோடு வாழும் ஒவ்வொரு முதியவரும் மதிப்புக்குரியவர்கள். அவர்களின் இறுதி மூச்சுவரை உலகுக்குத் தேவையானவர்கள். ஆகவே, அவர்கள் எப்போதும் மாண்புடனும் கௌரவத்துடனும் பராமரிக்கப்படவேண்டியவர்கள் என்று குறிப்பிட்டார். முதியவர்கள் பலர் இன்று பல துன்பங்களோடு, மற்றவர்களால் அலட்சியம் செய்யப்படுபவர்களாக, தகுந்த பராமரிப்பின்றி வாழும் நிலை மாறவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திருப்பலியின் பின் எல்லா முதியவர்களும் பவனியாக மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடைகள் போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். மதிய உணவு விருந்தும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. கவனிப்பாரின்றி வீடுகளில் முடங்கிக் கிடந்த பல முதியவர்கள் அன்றைய தினத்தில் முகமலர்ச்சியோடு உற்சாகமாக இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டதை அவதானித்த போது இத்தகைய நிகழ்வுகளின் அவசியத்தை நன்றாக உணரக்கூடியதாகவிருந்தது. சக்கோட்டைப் பங்கின் முன்மாதிரிகையை ஏனைய பங்குகளும் பின்பற்றி முதியோர் மாண்புடன் வாழ வழிகாட்ட முன்வரவேண்டும்.

இத்தகைய முதியோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வருடம் சாவகச்சேரிப் பங்கிலும் நடாத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## அச்சுவேலி சேமக்காலைச் சிற்றாலயத் திறப்புவிழா





அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயச் சேமக்காலையில் சிற்றாலயம் ஒன்று கடந்த ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இச் சிற்றாலயத்திற்கான நிதியுதவியை புனித சூசையப்பர் ஆலய புலம்பெயர் பங்குமக்கள் செம்மண் கீற்று என்னும் அடையாளத்துடன் அனுப்பிவைத்துள்ளார்கள். அவர்களின் பேருதவியை பங்கு மக்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றார்கள்.





## நியூயோர்க்கில் தமிழ்ப்புத்தாண்டுத் திருப்பலி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 2020 புத்தாண்டு தின தமிழ் திருப்பலி அருட்பணி அன்ரனி அல்பிரட் றொக் தலைமையில் ஒப்புக் கொடுக்கப் பட்டது.

இத்திருப்பலியில் நியூயோர்க் நகரை அண்டி வாழுகின்ற இலங்கை தமிழ்க்கத்தோலிக்க குடும்பங்கள் வருடா வருடம் ஒன்றுகூடி தம் புத்தாண்டு திருப்பலியை ஒப்புக் கொடுப்பது வழமையானதே.

அவ்வகையிலே இவ்வாண்டு புத் தாண்டுப்பலியிலே இணைந்து கொண்ட தாய்மார், தந்தையர், பிள்ளைகளைப் படத்தில் காணலாம்.

## சில்லாலை புனித யோசவ் வாஸ் திருத்தலத் திருநாள்

சில்லாலை புனித யோசவ் வாஸ் திருத்தலத் திருநாள் திருப்பலி 18.01.2020 அன்று யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் மாலை 4.30 மணிக்கு ஒப்புக்கொடுக் கப்படும்.

## தும்பளை புனித லூர்து அன்னைதிருத்தலப் பெருவிழா

தும்பளை புனித லூர்து அன்னை திருத்தலப் பெருவிழா எதிர்வரும் 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.30 மணியளவில் கொடியேற்றத் திருப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது. நவநாட்கள் 4.30 மணிக்குத் திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும். 10.02.2020 திங்கட்கிழமை 5.00 மணிக்குத் திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

11.02.2020 செவ்வாய்க்கிழமை முதற் திருப்பலி காலை 5.30 மணிக்கும், திருவிழாத் திருப்பலி காலை 7.00 மணிக்கும் இடம்பெறும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.